



பக்கங்கள் 8 விலை சதம் 40

# ஈழநாடு
THE EELANAADU

மலர் 20 பங்குனி 25 ரபி அவ் 28 இதழ் 56

யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 7-4-78

## இந்திரா குற்றம் இழைத்துள்ளார்

(புதுடில்லி)

1975ம் ஆண்டு அவசரகால நிலைமையைப் பிரகடனப்படுத்தியதன் மூலம் முன்னாள் பிரதமர் திருமதி இந்திராகாந்தி குற்றம் புரிந்துள்ளார் என்று ஷாகமிஷன் அறிவித்துள்ளது.

கமிஷன் விசாரணையின் இடைக்கால அறிக்கையில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது. திருமதி காந்தி மீது வழக்குத் தொடருவதா இல்லையா என்பது பற்றி அரசாங்கமே தீர்மானிக்கவேண்டும்.

### ''நீர்புதுக்குடியிருப்பு கூட்டணி கிளை தலைவரா என்று கேட்ட பொலிஸார்

# தமிழ்நாடு தரலாம் என்று கூறி 'லொக்கப்'பில் பூட்டினார்கள்

## எம். பி. வீடுநோக்கிச்சென்ற எனக்கு இக்கதி நேர்ந்தது!

### புதுக்குடியிருப்பு கூட்டணிக்கிளை தலைவர் சன்சோனிக்கமிஷன்முன் சாட்சியம்

— நமது நிருபர் கா. யோகநாதன் —

[யாழ்ப்பாணம்]

**''நீர் புதுக்குடியிருப்பு கூட்டணிக் கிளைத்தலைவரா?'' என்று பொலிஸார் என்னிடம் கேட்டபின்னர் சிங்களத்தில் எனது வாக்குமூலத்தை எழுதி கையெழுத்து வைக்குமாறு கூறினார்கள்.**

''தமிழ்நாடு தரலாம்'' என்று கூறிக்கொண்டே கான்ஸ்டபிள் இல்வா என்னை, அழைத்துச் சென்று லொக்கப்பில் போட்டுப் பூட்டினார்!

''பொலிசார் கூடி இரகசியமாகக் கதைத்தார்கள். எனக்கு அடித்து தொந்தரவுசெய்யப் போகிருர்கள் என்று நினைத்தேன் நான் றிமாண்டில் வைக்கப்பட்டு பின் பிணையில் விடப்பட்டேன். ஆனல் இன்னுவரை என்மீது வழக்கு விசாரணை நடைபெறவில்லை; எனக்கு கட்டளையும் வரவில்லை''

புதுக்குடியிருப்பைச் சேர்ந்த காசிப்பிள்ளை தம்பாப்பிள்ளை, சன்சோனிக் கமிஷன் முன் நேற்று சாட்சியமளிக்கையில் மேற்கண்டவாறு கூறினார்.

### கூட்டணி கிளைத்தலைவர்

புதுக்குடியிருப்பைச் சேர்ந்த காசிப்பிள்ளை தம்பாபிள்ளை மேலும் கூறியதாவது: ''நான் புதுக்குடியிருப்பு தமிழர் விடுதலைக் கூட்டணி கிளைத் தலைவர். முதலில் ஆசிரியராக இருந்து பின் கிராமசேவகராக கடமையாற்றினேன். செப்டம்பர் 6ம் தேதி காலை மூலைத்தீவு போனேன். எம் பி வீட்டுக்குப் போனேன். பொலிஸ்நிலையத்தைக் கடந்து சென்றேன். இன்ஸ்பெக்டர் டேவிட் வரும்படி கூப்பிட்டார். உள்ளே போனேன். இன்பெக்டர் டேவிட், என்னைச் சுட்டிக் காட்டி இவரைக் கூட்டிப் போய் முறைப்பாட்டை எடுத்து லொக்கப்பில் போடச் சொன்னர்.

### சிங்கள அகதிகளுக்கு உதவிய என்னை

முதலில் நான் அவருடன் சேர்ந்து சிங்கள அகதிகளை கூட்டி முகாம்களில் விட்டேன் அதனல். பகிடிக்கு சொல்கிருர் என்று நினைத்தேன். உடனே பொலிசார் என் வாக்கு மூலத்தை பதிவு செய்தார்கள் நீர் புதுக்குடியிருப்பு கூட்டணி தலைவரா? என்று கேட்டார்கள் சிங்களத்தில் எழுதிவிட்டு கையெழுத்து வைக்க சொன்னர்கள். கையெழுத்திட்டேன். பின் அங்கு இருந்தேன்.

தமிழ்நாடு தரலாம் என்று கூறி கான்ஸ்டபிள் இல்வா கூட்டிச் சென்ருர்.

சட்! தமிழ்நாடு தந்தாரா? உடனே கூட்டிச் சென்று லொக்கப்பில் போட்டுப் பூட்டினார். எனக்கு அவமானமாக போய்விட்டது. பொலிசார் இரகசியமாகக் கதைத்தார்கள். எனக்கு அடித்துத்தொந்தரவு செய்யப்போவதாக அறிந்தேன்.

### குற்றம் என்ன செய்தேன்

என்னகுற்றத்திற்காக அடைத்து வைத்திருக்கிறீர்கள்? என்று கேட்டேன். அந்த நேரம் சட்டத்தரணி மகேந்திரன் வந்து இன்ஸ்பெக்டருடன் கதைத்தார். பின் கோட்டிற்கு கொண்டுபோனார்கள். சட்டத்தரணியும் கூடவந்தார் என்னை 13ம் தேதி வரை றிமாண்டில் இருக்கும்படி உத்தரவிடப்பட்டது. 7 ம் திகதி யாழ். சிறைச்சாலையில் வைத்தார்கள் பின் எனக்கு விடுதலை என்று தகவல் கிடைத்தது 1500 ரூபா பிணையில் சென்றேன் வழக்கு இதுவரை விசாரணை செய்யப்படவில்லை. கட்டளையும் கிடைக்கவில்லை''.

## ''ஓடச்சொல்லிவிட்டு இராணுவம்சுட்டுவீழ்த்தியது'

[யாழ்ப்பாணம்]

அன்னலிங்கம் என்பவரை ஓடச்சொன்ன இராணுவ சிப்பாய் அவர் ஓடுவதற்கு இரண்டடி எடுத்து வைத்ததும் சுட்டு வீழ்த்தினர் என்று சன்சோனிக் கமிஷன்முன் சாட்சியமளித்த செல்வபுரத்தைச் சேர்ந்த பேரம்பலம் சுந்தரேஸ்வரன் கூறினார்.

செல்வபுரத்தைச் சேர்ந்த பேரம்பலம் சுந்தரேஸ்வரன் சன்சோனிக் கமிஷன்முன் கூறியதாவது!

ஆகஸ்ட் 29-ம் திகதி காலை 7 மணிக்கு இராணுவத்தினர் வந்தனர், வெடிச்சத்தம் கேட்டது என் வீட்டிற்கு வந்தனர், ஒரு இராணுவ வீரர் துவக்கைகொண்டு கலைத்தார். நான் காட்டுக்குள் ஓடியதும், வெடிச்சத்தம் கேட்டது. என் தந்தையும் நின்ருர், அவரும் காட்டுக்குள் ஓடிவர முயற்சித்தார். 67 வயதான அவரால் ஓட முடியவில்லை. ஓடமுயற்சித்தபோது வெடிச்சத்தம் கேட்டது. அன்னலிங்கம் என்பவரைப் பிடித்து இராணுவத்தினர் அடித்தனர்.

### ஓடச்சொல்லி சுட்டுவீழ்த்தினர்

அன்னலிங்கத்தை ஓடச் சொல்லிப்போட்டு, இராணு

[ -ம் பக்கம் பார்க்க]

பல்கலைக்கழக

## மாணவர்களுக்குப்போதிய பாதுகாப்பு வேண்டும்

### எதிர்க்கட்சித்தலைவர் வலியுறுத்து

[கொழும்பு]

தேசிய அரசுப் பேரவையில் நேற்று எதிர்கட்சித் தலைவர் திரு அ. அமிர்தலிங்கம், பல்கலைக்கழக மாணவர்கள் தொடர்பான ஒத்திவைப்புப் பிரேரணை ஒன்றைக் கொண்டு வந்தார்.

பல்கலைக்கழக வளாகங்கள் 24ந் திகதி திறக்கப்படவிருப்பதாக அறிகிறேன். ஆனல் பல்கலைக்கழகங்களைத் திறப்பதற்கு முன்னர், மாணவர்களுக்குப் போதிய பாதுகாப்பு ஏற்பாடு செய்யவேண்டுமென்று திரு. அமிர்தலிங்கம் கூறினர்.

அண்மையில் நடைபெற்ற ஒரு சம்பவத்தின்போது, சில மாணவர்கள் ஒரு கட்சியின் காரியாலயத்திற்குக் கடத்திச் செல்லப்பட்டதாகவும், அங்கு அவர்கள் தாக்கப்பட்டதாகவும் சில மாணவர்கள் எனக்குப் புகார் கூறியிருக்கிருர்கள் என்று திரு. அமிர்தலிங்கம் தெரிவித்தார்.

தமக்கு எந்தக் கட்சி பற்றியும் கவலையில்லையென்றும், மாணவர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்றும் திரு. அமிர்தலிங்கம் வலியுறுத்தினர்,

இச்சமயத்தில் சபைக்கு தலைமைவகித்த உப சபாநாயகர் பரக்கிர் மாக்கார், எதிர்க்கட்சித்தலைவர் ஆதாரமில்லாமல் சபையில் பேசுகிருர் என்றும் அபாயகரமான முறையில் அவர் நடக்கிருர் என்றும் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் ஒரு பகுதித் தகவலை மாத்திரம் பெற்றிருக்கிருர் என்றும் அவர் கூறுவது எல்லாம் முழுமையாகாது என்றும் உப சபாநாயகர் தெரிவித்தார்.

திரு. அமிர்தலிங்கம் பதிலளிக்கையில் சபை அங்கத்தவர்களான எங்களுக்கு இங்கு பேசுவதற்கு உரிமை இருக்கிறது. எமக்கு கிடைக்கும் தகவலை வைத்துத்தான் நாம் பேசுகிறேம் உப சபாநாயகர் இப்படி அடிக்கடி தலையிட்டு குறுக்கீடு செய்வது வழமை

(8ம் பக்கம் பார்க்க)



பாரதி கலாமன்றம் திருமதி ஞானமணி செல்லையாவின் மாணவியான செல்வி பபி யோவா தங்கராசாவின் நடன அரங்கேற்றம் இம்மாதம் 9ம் திகதி ஞாயிறு மாலை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறுகிறது. செல்வி பபி யோவா காலஞ்சென்ற தங்கராசாவினதும் யாழ். திருக்குடும்பக் கன்னியர்மடம் ஆசிரியை திருமதி தங்கராசாவினதும் புதல்வியாவார். அரங்கேற்ற வைபவத்தில் எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கமும் பாரியாரும் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வர்.

# "தமிழ் மீனவரின் 45 வாடிகள் எரிக்கப்பட்டன!"

## வணபிதா இராசையா சாட்சியம்

[யாழ்ப்பாணம்]

"உதவி அமைச்சர் வந்தார். அவரிடம் தெரிவிக்கப்பட்ட புகார்களைத் தொடர்ந்து உடன் நடவடிக்கை எடுத்தார். அதன் பின்னரும் இராணுவத்தினரும் பொலிசாரும் வந்து மீனவர்களுக்குத் தொல்லை கொடுத்தார்கள். 45 தமிழ் மீனவர்களின் வாடிகள் எரிக்கப்பட்டன" என்று நேற்றுமுன்தினம் சன்சோனி கமிஷன் முன் முல்லைத்தீவு வணபிதா இராசையா சாட்சியமளிக்கையில் கூறினர்.

அவர் மேலும் கூறியதாவது:

### வாடிகள் எரிக்கப்பட்டன

"ஆகஸ்ட் 21ம் திகதி பேதுருப்பிள்ளை அந்தோனிப்பிள்ளை வந்து வீடுகள் எரிக்கப்பட்டதாக சொன்னார். வல்பொல, பதவியா பொலிசாருடனும் இராணுவத்தினருடனும் வந்து தாக்கியதாகவும் கூறினர், வேறு பலரும் வந்து முறையிட்டனர். ஆகஸ்ட் 21ல் சிங்கள மீனவர்கள் கொக்களாயிலிருந்து புறப்பட்டு சென்றதாக அறிந்தேன். மற்ற மீனவர்கள் முல்லைத்தீவு முகாமிற்கு வந்தார்கள். அகதிகளை இராமக்கோடு முகாமிற்கு அனுப்பினேன்.

"சிங்கள தமிழ் மீனவர்கள் வாடிகள் எரிக்கப்பட்டன. நான் 6000 ரூபா வரை சேர்ந்து அகதிகளுக்கு வேண்டிய உதவிகளை செய்தேன். கொழும்பிலிருந்து வந்த குழுவினர் சிங்கள அகதிகளுக்கு உதவினார்கள். பெரும்பாலான சிங்களவர்கள் வீடுகளுக்கு திரும்பினார்கள். கொக்கிளாயில் இருந்தவர்கள் புல்மோட்டைக்கு சென்றனர். நாயாறிலும் சிலர் இருந்தனர். 45 தமிழ் வாடிகள் எரிக்கப்பட்டன. வெனட்புவ, நீர்கொழும்பு, மொறட்டுவா எம். பிக்கள் இராணுவ தளபதியுடன் வந்தார்கள். அகதிகள் போய், வாடிகள் எரிக்கப்பட்டது என்று சொன்னார்கள்.

### உதவி அமைச்சர் வந்தபின்னர்...

உதவி அமைச்சர் பொன்டஸ்டன் பெரேரா வந்தபோது மாநாடொன்று நடந்தது. வல்பொல, பதவியா பொலிசாருடனும் இராணுவத்தினருடனும் வந்து தாக்கியதாக அவரிடம் கூறினேன். அவர் உடன் நடவடிக்கை எடுத்தார். அதன்பின்பும் இராணுவத்தினரும் பொலிசாரும் வந்து மீனவர்களுக்கு தொல்லை கொடுத்தார்கள்.

### இந்திய கடற்படை பற்றி..

முல்லைத்தீவு கடலைநோக்கி ஒருலோஞ்சு வந்துகொண்டிருந்தது. இந்தியகடற்படை தமிழருக்கு உதவ முன்வருவதாகச் சொன்னார்கள். உயர் அதிகாரி ஒருவர் 'ஜீப்பில்' கடற்கரை நோக்கிச் சென்றார். மற்றொரு ஜீப்பில் இராணுவத்தினர் சென்றனர். கடற்கரையில் இராணுவத்தினர் உஷார் நிலையில் நின்றார்கள் லோஞ், சமீபத்தில் வந்துகொண்டிருந்தது. லோஞ்சில் நிறச்சேலைகள் அணிந்தவர்கள் காணப்பட்டனர் கடற்படையினர், குடும்பத்துடன் வரமாட்டார்கள் என்று எண்ணினேன். பின் நான் போய்விட்டேன்"

### உதவி அரசாங்க அதிபர் சாட்சியம்

முல்லைத்தீவு உதவி அரசாங்க அதிபர் சுந்தைய தெய்வசிகாமணி சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

"ஆகஸ்ட் 17ம் தேதி தர்மபுரத்திலிருந்து அகதிகள் முல்லைத்தீவு நகரத்திற்கு வந்தனர். இராமக்கோடு முகாமில் தங்கினர் 18ம் தேதி மேலும் பலர் முகாமிற்குவந்தனர் இராணுவ காம்பிற்கு சென்றனர்.

"இரண்டு மீனவர், கொக்குளாய் முகத்துவாரத்திலிருந்து புல்மோட்டைக்கு சென்றனர், ஆகஸ்ட் 20ம் தேதி அல்விஸ் இணைப்பு அதிகாரியாக நியமிக்கப்பட்டார். 21ம் தேதி ஒருமாநாடு நடந்தது. அகதிகள்பற்றி ஆராய்ந்தனர் 22ம் தேதி முல்லைத்தீவு எம்.பி வந்து என்னைச் சந்தித்தார்.

### பரபரப்பு ஏற்பட்டது

"23ம் தேதி அனுராதபுரத்திலிருந்து தமிழ் அகதிகள் வந்துசேர்ந்ததும், பரபரப்பு ஏற்பட்டது மாநாட்டில், வணபிதா இராசையாவும், எம்.பியும், கொக்குளாய் மீனவர்கள் தாக்கப்பட்டதுபற்றி கூறினர்கள் வல்பொல பற்றியும், பதவியா பொலிஸ் இராணுவம் பற்றியும் கூறினர்கள்.

"கொக்கிளாய்க்கும் விசேட பாதுகாப்பு போடும்படியும் கேட்கப்பட்டது கப்டன் ஜெயசுந்தரா தலைமையில் சிங்க பிரிவு இராணுவத்தினர் பொறுப்பேற்றனர். நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர். சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்டினர் அதன்பின் நிலைமை வழக்கத்திற்கு திரும்பியது''

## "பொலிஸாரும் இராணுவத்தினரும்
# மீன் வாடிகளுக்கு தீ வைத்தனர்"

— இளைப்பாறிய விதானையார்

## "தீப்பந்தம் வீசினார்கள்"

— திருமதி கலாராணி

வல்வெட்டியைச் சேர்ந்த திருமதி கலாராணி சுப்பிரமணியம் [25 வயது] கூறியதாவது;

என் கணவன் கட்டுகஸ்தோட்டையில் உதவி போஸ்மாஸ்டராக கடமையாற்றினார் வாடகை வீட்டில் அம்மா, கணவர், 5 வயதுக் குழந்தை ஆகியோர் இருந்தோம். அந்த வட்டாரத்தில் தமிழ் வீடு எங்களுடையதுதான்.

### தீப்பந்தம் வீசினர்

ஆகஸ்ட் 18ம் தேதி இரவு 9மணியளவில் ஆட்களை காணவில்லை நெருப்பு பந்தம் கண்டோம்- யன்னலால் பார்த்தேன். அப்போது குழந்தையை நித்திரையாக்கி கொண்டிருந்தேன். அப்போது நெருப்புப்பந்தம் யன்னல் கண்ணாடியால் உள்ளே வந்து விழுந்தது. அறை எரிந்தது: அன்று கணவர் வெளி ஹோலில் இருந்தார். பிள்ளையைக் கட்டிப்பிடித்தபடி மற்றப்பக்கம் விழுந்தேன். பிறகு நெருப்பு என்மீது பற்றிவிட்டதாக நினைத்தேன்: கட்டில் எரிந்து கொண்டிருந்தது. பின் என் கணவர் ஓடி வந்தார். பிள்ளையை அவரிடம் கொடுத்துவிட்டு, நெருப்பை கடந்து சென்றேன். அப்போது அடுப்படிக்குப் பக்கத்தில் உள்ள ஒரு அறை எரிந்தது நாங்கள் தப்பிவிட்டோம். பக்கத்திலுள்ள தபால் பியோன் விக்கிரமசிங்கா வீட்டிற்குஓடினோம். இரவு அங்கு தங்கினோம் மறுநாள் எங்கள் வீட்டிற்கு வந்து பார்த்தோம்.

எங்கள் அறை பூராவும் எரிந்து சாம்பல்தான் இருந்தது- பொலிசுக்கு கணவர் முறைப்பாடு கொடுத்தார். பிறகு முஸ்லிம் வீட்டில் இருந்தோம். எங்களுக்கு 8000ரூபா நஷ்டம். கணவர் இப்போது கொழும்பில் வேலை பார்க்கிறார். நான் வல்வெட்டியில் இருக்கிறேன்.

### பொலிசாரும் இராணுவமும் தீவைத்தனர்

கொக்கிளாயைச் சேர்ந்த கோணமலை செல்லையா கூறியதாவது: (இளைப்பாறிய விதானையார்) "விதானையார் 25 வருடம் வேலைபார்த்தேன். இளைப்பாறிய பின் இணக்க சபை தலைவராக இருந்தேன். பின்னர் கொக்கிளாய் கிராம சபைத் தலைவராக இருந்தேன்

வெளியூர் உள்ளூர் மீனவர்களுக்கு நான் தான் பொறுப்பாக இருந்தேன். 50ம் ஆண்டு மீன்பிடிப்பது பற்றி அங்கு பிரச்னை ஏற்பட்டது அந்நேரம் டி. ஆர். ஓ வாக சுப்பிரமணியம், திரு செல்லத்தம்பு ஆகியோர் கடமையாற்றினார்கள் டி ஆர் ஓ வுக்கு புகார் செய்தோம்

"ஊரில் உள்ளவர்களை தவிர 33 வெளியூர் மீனவர்களுக்கு லைசென்ஸ் கொடுக்கப் பட்டது கொழும்பிலிருந்து அதிகாரி வந்து இப் பிரச்னையைத் தீர்த்தார் பிறகு 56 வெளியூர் சிங்கள மீனவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது

கொக்கிளாயை சுற்றியுள்ள 5 கிராமத்தவர்கள் தான் அங்கு மீன்பிடிக்கலாம் என முடிவு செய்யப்பட்டது கொக்கிளாய் கொக்குதொடுவாய் கல்நட்டுக்கேணி, புல்மோட்டை தென்னமரவடி ஆகியவை அக்கிராமங்களாகும். 1977 மே மாதம் பிரச்னை இருந்தது. பதவியாப் பொலிசார் இதில் தலையிட்டனர். கலவரத்தின் போது கொக்கிளாயில் இருந்தேன். ஆகஸ்ட் 18ந் தேதி, வெளியூர் சிங்கள மீனவர் புல்மோட்டைக்குப் புறப்பட்டனர். ஆகஸ்ட் 21ந் தேதி முகத்துவாரத்தில் பொலிசாரும், இராணுவமும் வந்து குணத்தின்வாடியைக் கொளுத்தினார்கள். அன்று ஊரடங்குச் சட்டம் இருந்தது. அப்போது கடைகளைக் கொளுத்தினார்கள். வல்பொல வந்தாரா என்றார்கள். நான் அவரைக் காணவில்லை. ஆகஸ்ட் 23ந் தேதி ஜீப்பில் இராணுவமும் பொலிஸாரும் வந்து, சுற்றி வளைத்து வாடிகளுக்குத் தீயிட்டனர் நானும் பிள்ளைகளும் இருந்தோம். எங்கும் பரபரப்பாக இருந்தது. சரியான இவறியில்வந்தார்கள். தகாத வார்த்தைகளால் பேசினார்கள். ஒருவர் கையைக் கையால் பிடித்துச் சப்பாத்துக் காலால் இடுப்பில் உதைத்தார். அப்பாது ஸ்டீபன் வந்து "இவர்கள் பழைய விதானையாரின் பிள்ளைகள் அவர்களை ஒன்றும் செய்யவேண்டாம்'' என்றார். எங்களிடம் பயப்படாதீர்கள். ஓ-வேண்டாம் என்றார். பின் சந்தையா வீட்டைக் காட்டச் சொன்னார்கள்.

"மற்றச் சிங்களப் படை பின்னால் வந்தது. அவர்கள் நெருப்பு வைத்தார்கள். எனக்கு 9,000 ரூபா நஷ்டம்."

### ரூ. 100 அபராதம்

(யாழ்ப்பாணம்)

சட்டவிரோதமாக இறைச்சிக்காக மாட்டை வெட்டியதாகக் குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் மல்லாகம், பதில் நீதவான் திரு. ஜி. வி. பாலலிங்கம் எதிரிக்கு 100 ரூபா அபராதம் விதித்தார்.

இவ்வழக்கில் இளவாலையைச் சேர்ந்த பேதுரு செபமாலை, செபமாலை தவராசா ஆகியோர் சட்டவிரோதமாக

(5-ம் பக்கம் பார்க்க)


### அறிவித்தல்

சோலைவரி
1 ம் கந்தாயம் 1978

பண்டத்தரிப்புப் பட்டணப் பிரதேசத்திலுள்ள ஆதனங்களின் முதலாம் கந்தாய சோலைவரிக் கட்டணங்களைச் செலுத்துவதற்கு, 30-04-78ம் திகதிவரையும் கால நீடிப்பு கொடுக்கப்பட்டுள்ளது. இத் திகதிக்குப்பின் 10 சதவீதம் வராந்துச் செலவுப் பணமும் சேர்த்து அறவிடப்படும்.

இவ்வாண்டிற்குரிய 2 ம், 3 ம், 4 ம் கந்தாய வரிப் பணங்களை முறையே 30-6-78, 30-9-78, 31-12-78 ஆகிய திகதிகளுக்கு முன்பு செலுத்தப்படல்வேண்டும். இக்கந்தாயங்களுக்கு கால நீடிப்புக் கொடுக்கப்படமாட்டாது என்பதை அறியத்தருகின்றேன்

ஆ. ஞானசேகரம்,
விசேட ஆணையாளர்,
பண்டத்தரிப்பு,
பட்டணசபை.

பட்டணசபை
அலுவலகம்,
பண்டத்தரிப்பு,
3-4-78 8963

### வரி விளம்பரம்

தேவை

அனுபவம் மிகுந்த மணிக்கூடு திருத்துபவர் தேவை! தங்கும் வசதியுடன் தகுந்த சம்பளம் வழங்கப்படும். நேரில் அல்லது தபால் மூலம் தொடர்பு கொள்ளவும்; எலெக்றோ வொய்ஸ், 85, கண்டி வீதி, கிளிநொச்சி. 8962

நல்ல நிலையிலுள்ள சவலெற் அல்லது டொஜ் பெற்றோல் லொறி தேவை. முழு விபரங்களுடன் தொடர்பு கொள்ளவும் இ. க. க. குருதேவர், "மீரு இல்லம்" மயிலிட்டி. 8970

### யாழ். பேராலய அதிர்ஷ்ட லாப சீட்டு முடிவுகள்

பரிசு பெற்ற இலக்கங்கள்

| | | |
|---|---|---|
| 2651 | 20063 | 18529 |
| 3025 | 20033 | 18626 |

ஆறுதல் பரிசுகள்

| | | |
|---|---|---|
| 19822 | 2613 | 2988 |
| 16015 | 2657 | 12868 |
| 16009 | 26671 | 28405 |

(8971)

### அரிசி ஆலை

இயந்திர இயக்குனர்
(Operator)

பதவிக்கான வெற்றிடம்

மேற்படி பதவிக்கு அனுபவம், திறமை வாய்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் அனுபவ, கல்வித் தராதரப் பத்திரப் பிரதிகளுடன், பொது முகாமையாளர், கரைச்சி வடக்கு ப. நோ. கூ. சங்கம், பரந்தன் என்ற முகவரிக்கு 12-04-1978க்கு முன்னர் கிடைக்கக்கூடியதாகப் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கவும். தொழிற் தகுதிக்கேற்பச் சம்பளம் வழங்கப்படும்.

பொது முகாமையாளர்
கரைச்சி வடக்குப் ப. நோ. கூ. சங்கம்,
பரந்தன்.

1978-04-05 8969

### ஆதனவரி அறிவித்தல்

இத்தால் சகலருக்கும் அறிவித்தருவது யாதெனில், கிளிநொச்சிப் பட்டண சபைக்கு ஆதனவரியாகச் செலுத்துவோர் முதலாம் காலாண்டுக்கான வரிப்பணத்தை ஏப்ரல் மாதம் 30-ந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ இப்பட்டண சபையில் செலுத்தி பற்றுச்சீட்டுப் பெற்றுக்கொள்ள வேண்டும். தவறின் செலுத்தவேண்டிய பணத்தில் 10% குற்றப்பணமாக அறவிடப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன்.

இரண்டாம், மூன்றும், நான்காம் காலாண்டுகளுக்கு ஆதனவரியாகச் செலுத்துவோர் முறையே யூன்மாதம் 30க்கும் செப்தெம்பர் 30க்கும், திசம்பர் 31க்கும் முன்னதாக பணத்தைச் செலுத்திப் பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்ள வேண்டும். தவறுவோர் மீது ஆதனவரியாகச் செலுத்த வேண்டிய பணத்தில் 10% குற்றப்பணம் அறவிடப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன்.

விசேட ஆணையாளர்,
கிளிநொச்சிப் பட்டணம்
விசேடஆணையாளர்
அலுவலகம்,
கிளிநொச்சிப்பட்டணம்,
கிளிநொச்சி.
4-4-1978. 8964

ஈழநாடு
The Eelanaadu

# இன்ஸ்பெக்டருக்குப் பயிற்சி வேண்டும்?

— சட்டத்தரணி

## பதுக்கலும் கொள்ளை லாபமும்

அத்தியாவசிய உணவுப் பொருட்களைப் பதுக்கிவைத்துக் கொள்ளை லாபமடிக்கும் வர்த்தகர்களின் சிவில் உரிமைகள் பறிக்கப்பட வேண்டும்; தேவைப்படுமிடத்து, அத்தகையோருக்கு சசையடித் தண்டனை வழங்கி, அவர்களின் பாஸ்போர்ட் முதலியவற்றையும் பறிமுதல் செய்யவேண்டும்.

வாழ்க்கைச் செலவு உயர்வு பற்றி ஆராய்ந்த, தேசிய அரசுப் பேரவை உறுப்பினர்களின் கமிட்டி, தனது இடைக்கால அறிக்கையில் மேற்கண்டவாறு சிபார்சு செய்துள்ளது.

வர்த்தகர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை விசாரிக்கவென மாவட்டங்கள் தோறும் விசேட நீதிமன்றங்கள் அமைக்கப்பட வேண்டுமென்றும், நிர்வாக சேவை அதிகாரிகளுக்கும் விலைக் கட்டுப்பாட்டு அதிகாரங்கள் வழங்கவேண்டுமென்றும் அந்தக் குழு தெரிவித்திருக்கிறது.

வாழ்க்கைச் செலவு உயர்வைக் குறைப்பதற்கு மேலும் பல ஆலோசனைகளையும் அந்தக் குழு தெரிவித்திருக்கிறது.

இது இடைக்கால அறிக்கைதான். இறுதி அறிக்கை விரைவில் சமர்ப்பிக்கப்படவிருக்கிறதாம்.

வாழ்க்கைச் செலவு அதிகரிப்புக்குப் பதுக்கலும் கொள்ளை லாபமுந்தான் பெரிதும் காரணமாக இருக்கிறதென்பது நாடறிந்த விஷயம்.

ஆட்சிக்கு வரும் ஒவ்வொரு அரசாங்கமும் வாழ்க்கைச் செலவு உயர்வைக் குறைப்பதற்கும், பதுக்கல், கொள்ளை லாபத்தை ஒழிப்பதற்கும் கமிட்டிகளை நியமித்தும், பொலிசாருக்கும் கூட அதிகாரங்கள் வழங்கியும் எத்தனையோ முயற்சிகளைச் செய்துபார்ப்பது வழக்கம்.

ஆனால் இவையொன்றும் உரிய பயனை அளிக்கவில்லை.

முன்னைய அரசு, தனியார்துறையை நசுக்குவதாகப் பொதுவாகப் புகார் கூறப்பட்டது.

ஆனால் இன்றைய அரசு, தனியார் துறைக்குப் போதிய சந்தர்ப்பம் அளித்துள்ளது. அத்தியாவசிய உணவுப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கும் தனியாருக்கும் இனி அனுமதி வழங்கப்படவிருக்கிறது.

தனியார்துறையினருக்குச் சலுகைகளும், உரிமைகளும் வழங்கப்படும்போது கூட, பதுக்கலும், கொள்ளை லாபமும் அதிகரிக்குமானால் இத்தகைய செயல்களில் ஈடுபடுவோரை மன்னிக்கமுடியாது.

பதுக்கல் கொள்ளை லாபத்தில் ஈடுபட்டு அகப்பட்டுக்கொள்பவர்களும் எளிய சிப்பந்திகளைத் தண்டனையை அனுபவிப்பதற்கு அனுப்பிவிட்டுத் தப்பிக்கொள்கிறார்கள்.

பதுக்கலும் கொள்ளை லாபமும் தேசத்துரோகமாகக் கருதப்பட்டு மிகக் கடுமையான தண்டனை விதிக்கப்படவேண்டும்.

இதேசமயம் இக்குற்றங்களைச் சரியான முறையில் கண்டுபிடித்துத் தண்டனை பெற்றுக் கொடுக்கத்தவறும் அதிகாரிகளுக்கும் கடுந்தண்டனை விதிக்கப்படுவதும் அவசியமாகும்.

பதுக்கலையும் கொள்ளை லாபத்தையும் ஒழிப்பதில் பொதுமக்களும் ஒத்துழைப்பளித்துத் தமது கடமையையும் சரிவரச் செய்ய வேண்டியதும் அவசியமாகும்.

## 'சுகவீனமுற்றிருந்ததால் பயிற்சி பெறவில்லை'
## — பி. குருசாமி

[யாழ்ப்பாணம்]

இன்ஸ்பெக்டர் பி. குருசாமி நேற்று மூன்தினம் சட்டத்தரணிகளால் குறுக்குவிசாரணைசெய்யப்பட்டார். இதன் முதல்பகுதி நேற்றைய 'ஈழநாடு' பத்திரிகையில் வந்தது. மிகுதி இங்கு வெளியாகிறது.

### பயிற்சி பெறவில்லை

சட்: ஊர்காவற்றுறையில் இருந்து நீர் எதற்காக அனுப்பப்பட்டீர்? அங்கு சார்ஜன்ட் ஒருவர் இருந்தார். அதனால் சென்றேன்.

சட்: உமக்கு எதிராக குற்றச்சாட்டு இருந்ததா? இல்லை.

சட்: தண்டனை பெற்றுச் சென்றீரா? இல்லை.

சட்: நீர் பயிற்சிபெறவில்லை? இல்லை.

சட்: இன்ஸ்பெக்டராக பயிற்சிபெறுவதுண்டு? ஆம். எனக்கு சுகவீனமாதலால் பயிற்சிபெறவில்லை.

சட்: இன்றுவரை நீ பயிற்சிபெறவில்லை? இல்லை.

சட்: பயிற்சி எவ்வளவு காலம்? 2 கிழமை.

சட்: எப்போது நியமனம் கிடைத்தது? செப்டம்பரில்.

சட்: கொழும்புக்கு போனீரா? ஆம்.

சட்: முதல்பயிற்சி வகுப்பிற்கு செல்லவில்லை? இல்லை.

சட்: ஆகஸ்ட் 16ம் திகதி தலைமைக்காரியாலய இன்ஸ்பெக்டர் உம்மை ஆஸ்பத்திரிக்கு அனுப்பினார்? ஆம்.

சட்: என்ன சொன்னார்? பண்டாரவை கூட்டிவர முடியுமா என்று பார்த்துவரச் சொன்னார்.

சட்: அவர் ஆஸ்பத்திரியில் இருக்க விரும்பவில்லையென்றார்? ஆம்.

சட்: போய் பண்டாரவை கூட்டிவா என்றார்? ஆம்.

சட்: அந்தநேரம் ஏ எஸ் பீ நூர்தீன் அங்கு நின்றார்? ஆம்.

சட்: ஆயுதங்கள் எல்லா பொலிசாருக்கும் வழங்கப்பட்டது? ஆம்.

சட்: அபாயமணி கேட்டதா? ஆம்.

சட்: தலைமைக்காரியாலய இன்ஸ்பெக்டரிடம் போகுமுன் அபாயமணி கேட்டது? ஆம்.

### பொலிசாருக்கு நம்பர் இருந்தது

சட்: விபரங்கள் பேப்பரில் எழுதப்பட்டன? ஆம்.

சட்: பொலிசாருக்கு நம்பர் இருந்ததா? ஆம்.

சட்: நம்பர் இல்லாதவர்கள் வரவில்லை? ஆம்.

சட்: எல்லாப் பொலிசாருக்கும் நம்பர் இருந்ததைக் கண்டீர்? ஆம்.

சட்: பொலிஸ் கோஷ்டி போனதைக் கண்டீர்? ஆம்.

சட்: நீரும் போனீரா? இல்லை.

சட்: அதன்பின் தலைமைக் காரியாலய இன்ஸ்பெக்டரிடம் வந்தீர்? ஆம்.

சட்: எவ்வளவு நேரத்தால்? 15 நிமிடத்தால்.

சட்: எங்கே இருந்தார்? சந்தோரில்

சட்: றேடியோ அறையில் தான் இருந்தாரா? இல்லை

சட்; 16ம் தேதி நீர் றேடியோ அறைக்கு பொறுப்பா? இல்லை.

சட்: தலைமைக்காரியாலய இன்ஸ்பெக்டர் கூப்பிட்டு ஆஸ்பத்திரிக்குப் போகும்படி சொன்னார்? எத்தனை வாகனங்கள் சென்றன? 2 வாகனங்கள்

சட்: இரண்டும் ஒன்றாகச் சென்றன? ஆம்.

சட்: பொலிசாரும் வந்தனர்? ஆம்.

சட்: பொலிசாரை தெரியும்? தெரியாது

சட்: மற்ற வாகனத்தில் வந்த பொலிசாரைத் தெரியுமா? இல்லை

சட்: அவசரமாகக் கூட்டி வரச் சொன்னார்? இல்லை

சட்: கலவரம் நடந்ததால் அவசரமாகப் போகவேண்டும் என்றீர்? ஆம்

### 'பெட்' டிக்கட்டு

சட்: நீர் பண்டாராவுடன் கதைத்தீரா? ஆம்

சட்: 17ம் வார்ட்டில் அவரைச் சந்தித்தீர்? ஆம்

சட்: ரிக்கட்டை காட்டினார்? ஆம்

சட்: 'பெட்' டிக்கட் என்றால் என்னவென்று தெரியுமா? ஆம்

சட்: அதை வெளியில் கொண்டுபோகக்கூடாது? ஆம்

சட்: 'பெட்' டிக்கட்டை பண்டா கையுடன் கொண்டு போனார்? தெரியாது

சட்: 'பெட்' டிக்கட்டை அட்டெண்டன் வந்து பண்டாவிடம் திருப்பி வாங்கிச் சென்றதாக இங்கு கூறினீர்? நான் சொல்லவில்லை

கமிஷனர்: நீர் நேரடியாக கண்டறிந்த சம்பவங்களுக்கு தெரியாது, இருக்கலாம், எனக்குத் தெரியாது என்று பதில் கூறுகிறீர்; நேரடியாகக் கண்டிருந்தால், அதனைச் சொல்ல வேண்டும், அதுதான் உம்மிடம் கேட்கப்படுகிறது.

சட்: பொலிஸ் நிலையத்திலிருந்து வெளியில் ஜீப் சென்றால் "என்றி" போடவேண்டும்? ஆம்

### 'என்றி' போடவில்லை

சட்: நீர் ஜீப் கொண்டு போனதற்கு 'என்றி' போடவில்லை? இல்லை

சட்: இதென்ன உல்லாசப் பயணமா; அரசு பெற்றோலுக்கும், ஒயிலுக்கும் காசு தருகிறது- அதற்கு நீங்கள் 'என்றி' போடவேண்டும்? ஆம்

சட்: நீர் 'என்றி' போடவில்லை? வாகனத்திற்கு நான் "என்றி" போடத் தேவையில்லை

சட்: சகல தகவல்களும் பொலிஸ்மா அதிபருக்கு; பொலிஸ் அதிபரால் அனுப்பப்படுவது வழக்கம்? ஆம்

சட்: இங்கு தகவல் பொலிஸ் அதிபரின் அங்கீகாரமின்றி அனுப்பப்பட்டது? சில தகவல்கள் அனுப்பலாம்.

சட்; எப்படியான தகவல்கள்? பதில்கள் பொலிஸ் அதிபருக்கு தெரியாமல் அனுப்பலாம்

சட்: நான் பதில் பற்றிக் கேட்கவில்லை. தகவல் எஸ் பிக்கு தெரியாமல் அனுப்பலாமா? ஆம்

சட்: எந்த விதத்தில்? சொந்த அதிகாரத்துடன்

சட்: என்ன தகவல் அனுப்பலாம்? முக்கியமற்ற தகவல்

சட்? றேடியோ தகவல் முக்கியமற்றதா? தகவலைப் பொறுத்து

### றேடியோ தகவல்

சட்: 4 இ போ ச பஸ் எரிந்ததாகவும், நாகவிகாரை தாக்கப்பட்டதாகவும், ரயில் நிலையத்தை தாக்க விருக்கிறார்கள் என்றும் தகவல் அனுப்பப்பட்டது? ஆம்

சட்: இது எஸ் பி அனுமதியின்றி அனுப்பமுடியாது? ஆம்

சட்: குமாரசாமிக்கு இந்த தகவல் கொடுத்தது யார் என்று உமக்குத் தெரியாது? தெரியாது

### சன்சோனி கமிஷன் விசாரணை

சட்: தலைமைக் காரியாலய இன்ஸ்பெக்டர் வந்து போன போது நீர் அங்கு இல்லை? இல்லை

சட்: யார் அந்த தகவல் கொடுத்தது தெரியாது? ஆம்

சட: தலைமைக் காரியாலய இன்ஸ்பெக்டர் கொடுத்திருக்கலாம்? கொடுத்திருக்கலாம்

சட்: பொலிஸ் அதிபரும் கொடுத்திருக்கலாம்? ஆம்

சட்: எஸ். பி யிடம் போய் ஏன் இந்த தகவல் கொடுக்கப்பட்டது என்று கேட்டீரா? அந்தத் தகவல் பற்றி முதலில் தெரியாது?

சட்: தகவல் பற்றி தெரியாது? ஆம்

சட்: அப்படியிருந்தும்மேலும் தகவல் வரும் என்று அறிவித்தார்? ஆம்

சட்; முதல் தகவல் எப்படி பொய் என்று தெரியும்? தெரியும்?

சட்: நீர் விசாரணைக்குப்போகவில்லை? இல்லை

சட்: ரயில் நிலையத்திற்குப் போகவில்லை? இல்லை

சட்: இ போ ச பஸ்ஸைப் பார்க்கவில்லை? இல்லை

சட்: மற்றவர்களிடம் கேட்டீரா? இல்லை

சட்; எப்படித் தெரியும்? முதல் என்றிகளைப்பார்த்து அறிந்து கொண்டேன்

சட்; ஒன்றும் நடக்கவில்லை அதனால் பொய் என்று நினைத்தீர்? ஆம்

சட்: புதிதாக ஒரு சம்பவம் நடந்திருந்தால் முன்பு நடந்த சம்பவம் தோல்வி என்பது உமது கருத்தா? அப்படியென்றால் எனக்கு சொல்வார்கள்

### றேடியோ அறையில் இருந்தேன்

சட்: நாகவிகாரை 10 நிமிடத்திற்கு முன் தாக்கப்பட்டிருந்தால்? ஒருவரும் வந்துசொல்லவில்லை

சட்: நீர் முதல் என்றிகளைப் பார்த்தீர்? ஆம்

சட்: நீர் இச்செய்தி அனுப்பவில்லை? இல்லை எனக்கு அவர் சொல்லவில்லை

சட்: நீர் எங்கே இருந்தீர்? றேடியோ அறையில்

சட்: இரண்டு றேடியோ அறை, ஒன்றில் தகவல் கொடுக்கலாம்? ஆம்

சட்: குமாரசாமி எங்கே இருந்தார்? ஒரு அறை வாசலில்

சட்: அவர் மேசை வெளியில்? ஆம்

சட்: உமது மேசை உள்ளே? -ஆம்

சட்: எவரும் குமாரசாமிக்குத் தகவல் கொடுத்திருக்கலாம்? ஆம்

சட்: பொலிஸ் அதிபர், தலைமைக்காரியாலய இன்ஸ்பெக்டர் தகவல் கொடுத்தது உமக்குத் தெரியாது? தெரியாது

சட்: 'என்றி' யைப் பார்த்துத்தான் முடிவு எடுத்தீர்? -ஆம்

சட்: வேறுவிதமாக முடிவு எடுக்கவில்லை? இல்லை

### 16-ம் தேதி

சட்: 16-ம் தேதி றேடியோ அறையில் இருந்தீர்? ஆம்

சட்: அதனால் 16ம் தேதி தகவல்பற்றிக் கூறமாட்டீர்? -ஆம்

சட்: கமிஷன் முன் 16-ம் தேதி றேடியோ அறையில் இருந்தீர் என்று சொன்னீரா? ஆம்

சட்: முதல் சாட்சியத்தைத் திருத்திக் கூறப்போகிறீரா? -17ம் தேதிதான் றேடியோ நிலைய அறை திறக்கப்பட்டது 16-ம் தேதி நான் இருந்த போதும், றேடியோ இயக்கப்படவில்லை, 16ம் தேதி அங்கு வேலையில்லை, 17ம் தேதிதான் திறக்கப்பட்டது.

சட்: நிலைமை அறிக்கை தினமும் கொழும்புக்கு அனுப்பப்படும்? ஆம்

சட்: எஸ் பி. கொழும்புக்கு அனுப்புவார்? ஆம்

(6ம் பக்கம் பார்க்க)

### மணிவாக்கு

கணவன்-மனைவியை அளவிற்கு விஞ்சி அடிமைப் படுத்தலாகாது. கணவனுக்கு எடுத்துக்காட்டாக இராமனையும் சீதையையும் நான் கொண்டிருக்கிறேன். —காந்திமகான்

## இன்று இல்லக் கலைவிழா

(சங்கானை)

சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலய இல்லக் கலைவிழா இன்று மாலை 2 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் நடைபெறுகிறது.

வித்தியாலய அதிபர் திரு. நா. ஆ நாகராசா தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் வட்டுக்கோட்டை தேசிய அரசுப் பேரவை உறுப்பினர் திரு. தா திருநாவுக்கரசு பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார் திருமதி கலைமகள் திருநாவுக்கரசு பரிசில் வழங்குவார்.

கல்லூரி மாணவ மாணவிகளின் கலைநிகழ்ச்சிகளும் இடம் பெறும். (இ)

......

## நடேஸ்வராவில் கலைவிழா

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரிக் கலைமன்றத்தின் கலை இலக்கிய விழா இன்று காலை, கல்லூரிப் புதிய மண்டபத்தில் அதிபர் திரு. பொன் சோமசுந்தரம் தலைமையில் நடைபெறுகிறது.

'கர்ணன்', 'இக்கலும் சிரிப்பும்' முதலான நாடகங்கள், சக்கடத்தார் இராஜரத்தினம், நடிகர், சித்திர விற்பன்னர் வி. சுந்தரமூர்த்தி ஆகியோரின் பேட்டி, இசை மற்றும் அநேக நிகழ்ச்சிகள் விழாவில் இடம் பெறும். (அ)

# அன்னதானத்தின்போது இளைஞர்கோஷ்டி தாக்கியது

## விக்கிரகங்களையும் மற்றும் பொருள்களையும் கொள்ளையடித்தது

### அநுராதபுரம் குருக்கள் சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

அன்னதானம் நடந்துகொண்டிருக்கையில் இளைஞர் கோஷ்டியொன்று வந்து தன்னையும் கோயிலில் நின்றவர்களையும் தாக்கியதுடன் பொருள்களையும் விக்கிரகங்களையும் கொள்ளையடித்துச் சென்றது என்று அனுராதபுரம் கதிரேசன் கோயில் பூசகர் நடராசாக் குருக்கள் சன்சோனிக் கமிஷன்முன் சாட்சியமளிக்கையில் கூறினார்.

அனுராதபுரம் கதிரேசன் கோவில் பூசகர் பொன்னையா இரத்தினசபாபதிக் குருக்கள் நடராசாக் குருக்கள் சன்சோனிக் கமிஷன்முன் கூறியதாவது:- நான்கு சந்ததியாக என் குடும்பம், அக்கோவிலில் பூசகராக இருந்துவருகிறது. மற்ற சமயத்தவரும் கோவிலுக்கு வருவதுண்டு.

ஆகஸ்ட் 17ம் தேதி, அன்னதானம் நடந்துகொண்டிருந்தது. அப்போது இளைஞர் கோஷ்டியொன்று வந்து, என்னை அடித்து உதைத்தது. நான் மயக்கமடைந்துவிட்டேன். அங்கு நின்றவர்களுக்கும் அடித்தார்கள். பின் உள்ளே சென்று வெள்ளி, பித்தளைச் சாமான்களை எடுத்துச் சென்றனர். அம்மன் உருவத்தையும் கொண்டு சென்றனர்; எனது முகத்தில் தடியால் அடித்தார்கள், மயக்கம் தெளிந்தது. குண்டர்கள் வீட்டுப் பக்கம் போனார்கள், நான் வீட்டுக்குப் போனேன். வீட்டின் பின்னல் கதவுகளை எடுத்துச் சென்றனர். பின் பொலிசாருடன், கோவிலுக்குச் சென்றேன். அங்கு அம்மன் சிலை இல்லை. 21 நாட்களுக்குப் பின் போனேன். சாமான்கள் எல்லாம் கொள்ளையடிக்கப் பட்டிருந்தன. மற்றும் பார்வதி, வள்ளியம்மன், தெய்வானையம்மன் சிலைகளும் கொள்ளையடிக்கப்பட்டிருந்தன. பித்தளை விளக்கு, குடங்கள் களவாடப்பட்டிருந்தன. 20 மாடுகளைக் காணவில்லை; கோவிலுக்கு 50,000 ரூபா நஷ்டம். கோயில் சாமான், வீட்டுச் சாமான்கள் 75,000 ரூபாய் நஷ்டம். கும்பாபிஷேகம் செய்யாமல், பூசை நடத்த முடியாது. பிராயச்சித்தம் செய்யவேண்டும். இதற்குமட்டும் 15,000 ரூபா தேவை.

### விகாரை எரிந்து விட்டதாக சொன்னார்கள்

அனுராதபுரம் கச்சேரியில் இருந்தபோது யாழ். நாக விகாரை எரிந்துவிட்டதாக சொன்னார்கள் யாழ்ப்பாணத்தில் சிங்களவர் தாக்கப்பட்டதாகவும் சொன்னார்கள்.

பகல் ஒன்றரை மணிக்கு சாப்பிட ஆயத்தமானோம். அப்போது கண்ணீர்ப் புகை அடித்தார்கள். கண்கள் விழிக்கமுடியாமல் போனது 'சாப்பாட்டை மூடிவையுங்கள்' என்றேன். மூலஸ்தானம் சென்றோம். கதவைப்பூட்டினோம் இரவு 7 மணிவரையும் இருந்தோம் பொலிஸார் வந்து கூட்டிச் சென்றனர். கற்களை கோவில் ஓடுகளுக்கு எறிந்தார்கள். பின் யாழ்ப்பாணம் வந்துசேர்ந்தேன். பகலில் உண்டியலைஉடைத்து காசு எடுத்து சென்றுவிட்டார்கள் 20,000 ரூபா கோவிலுக்கு நஷ்டம் கேகாலை பொலிஸில் புகார் செய்தேன்.

கோவில் தொண்டர் ஒருவரின் முகத்தில் பிளேட்டினால் வெட்டினார்கள்.

### கேகாலை கோயில் பூசகர் சாட்சியம்

கேகாலை கதிரேசன் கோவில் பிரதம பூசகர் அண்ணாசாமி குருக்கள் தியாகராசாகுருக்கள் கூறியதாவது:

கடந்த 29 வருடம் பூசகராக இருந்தேன். 1958ம் ஆண்டு கோயில் திருப்பிக்கட்டப்பட்டது. பொலிஸ் அதிபர் வீட்டிலிருந்து காலைமைல் தூரத்தில் கோவில் இருக்கிறது. கலவரம் ஆரம்பமானதும் கோவிலுக்கு பாதுகாப்பு கேட்டேன். காவல் போட்டார்கள். 18ம் தேதிவரை காவல்இருந்தது. 3 பொலிஸார் இருந்தனர் பயப்படவேண்டாம் கோவில்பூட்ட வேண்டாம், கதவைத்திறந்து விடுங்கள் என்றனர் 19ம் தேதியும் காவல் இருந்தது.

# "போகச் சொல்லிவிட்டு இராணுவத்தினர் சுட்டனர்"

(யாழ்ப்பாணம்)

சண்முகலிங்கத்தின் சேட்டைப் பிடித்துக்கொண்டிருந்த இராணுவத்தினர் ஒருவர் அவரைப் போகச்சொல்லிவிட்டுச் சுட்டார். சுடப்பட்டவர் இறந்து விட்டார் என்று வவுனிக்குளம் சிவபுரத்தைச் சேர்ந்த நாகமணி தம்பிஐயா என்பவர் சன்சோனிக் கமிஷன் முன் நேற்றுத் தெரிவித்தார்.

வவுனிக்குளம் சிவபுரத்தைச் சேர்ந்த நாகமணி தம்பிஐயர் சன்சோனிக் கமிஷன்முன் கூறியதாவது:

'ஆகஸ்ட் 29-ம் திகதி வீட்டிலிருந்தேன். காலை சாமான்கள் வாங்கிக்கொண்டு வந்தேன். அப்போது துவக்கு வெடிச் சத்தம் கேட்டது. வீட்டிற்கு ஓடிப்போனேன். பிள்ளைகள் இருந்தார்கள், வழியில் இராணுவத்தினர் வந்தனர். திரும்பி வேறு வழியில் சென்றேன். வீட்டிற்கு போகவில்லை. ஒரு இராணுவ வீரர் சண்முகலிங்கத்தை சேட்டில் பிடித்துக்கொண்டு நிற்பதைக் கண்டேன். நான் பயந்து படுத்துவிட்டேன். சண்முகலிங்கத்தை போகவிட்டுச் சுட்டார். பின் அங்கிருந்து இராணுவத்தினர் ஓடிவிட்டனர். சுடப்பட்டவர் இறந்தார். சிவபுரத்தைச் சேர்ந்த இன்னொருவன் ஒருவனும் சுடப்பட்டு இறந்தான். மன்னார் நீதவான் வந்து விசாரணை நடத்தினார். நீதவான் ஒருவரின் சாட்சியத்துடன் விசாரணையை முடித்து விட்டார்.

### மகன் சுடுபட்டுக் கிடந்தார்

வவனிக்குளத்தைச் சேர்ந்த சின்னத்தம்பி முருகேசு சன்சோனிக் கமிஷன் முன் கூறியதாவது: பத்துவருடமாக செல்வபுரத்தில் குடியிருக்கிறேன். ஆகஸ்ட் 29ம் தேதி நடந்த சம்பவங்களை கேள்விப்பட்டேன், எனக்குத்தெரியாது.

கமிஷனர்: உமக்குத் தெரியாதா? மகன் சொன்னார்;

கமிஷனர்: உமக்குத் தெரியாதா? தெரியும்.

கமிஷனர்: உமக்கு தெரிந்ததைச் சொல்லும்? நானும் மகனும் வீட்டிலிருந்தோம், அன்று காலை வெடிச் சத்தம் கேட்டது.

சட். சரத்சில்வா: கண்டதைச் செல்லும்.

கமிஷர்: நீர் கண்டதைச் சொல்லும்? வெடிச்சத்தம் கேட்டது. இரண்டு இராணுவத்தினர் கேற்றுக்குள் வந்தார்கள். நாங்கள் காட்டுக்குள் பாய்ந்தோம் பின் வெடிச் சத்தம் கேட்டது. மறுநாள் காலை வந்து பார்த்தேன். வீடு எரிந்துகிடந்தது. உள்ளே போய்ப் பார்த்தேன் மகன் றைபிளால் சுடப்பட்டுஎரிந்து சுருண்டு கிடந்தார்டாக்குத்தர் வந்துஉடலிலிருந்துஎடுத்தார்.

கமிஷனர்: காட்டுக்குள் ஓடினதாகச் சொன்னீரே? சுடுபட்ட மகன் வரவில்லை.

சட்: எத்தனை பிள்ளைகள்? 2 ஓடும்போது ஒருவர் ஓடிவந்தார். மற்ற மகன் வரவில்லை.

# "அடிக்க வேண்டாமென கையெடுத்து கும்பிட்டேன்

## சப்பாத்துக்காலால் தலையில்மிதித்தார்கள்"

(யாழ்ப்பாணம்)

அடிக்கவேண்டாம் என கையெடுத்துக் கும்பிட்டேன். சப்பாத்துக்காலால் தலையில் மிதித்தார்கள் என்று மாங்குளத்தைச் சேர்ந்த ரயில்ஊழியர் சதாசிவம் என்பவர் நேற்று சன்சோனிக் கமிஷன் முன் சாட்சியமளிக்கையில் கூறினார்.

வவனிக்குளம் செல்வபுரத்தைச் சேர்ந்த கந்தையா பொடி சிவலிங்கம் என்பவர் கூறியதாவது: பத்து மாதமாக செல்வபுரத்தில் இருக்கிறேன்; ஆகஸ்ட் 23ம் தேதி 7 மணிக்கு ஜீப்வரும் சத்தம் கேட்டது; இராணுவத்தினர் இறங்கி வந்தனர். மூன்று முறிப்புகிராமசேவகர் அந்தோனிப்பிள்ளை கதைத்துக்கொண்டிருந்தார்;

'அடே தமிழா' என்ற சத்தம் கேட்டதும், அந்தோனிப்பிள்ளை ஓடத் தொடங்கினார். 2 இராணுவத்தினர் 'அடே அடே' என்று துரச் சென்றனர். ஒரு வெடிச்சத்தம் கேட்டது. அந்தோனிப்பிள்ளை கீழே விழுந்தது கண்டேன். அதன்பின் நடந்தது தெரியவில்லை. நான் மனைவியுடனும் பிள்ளையுடனும், பயத்தால் புறப்பட்டேன். அந்த நேரம் பிள்ளை தவறிவிழுந்தது. பிள்ளை செத்துப்பேச்சு என்று தாயார் கூறினார். தன் கையால் தூக்கினார். 3 இராணுவத்தினர் எனக்கு முன்னால் வந்து றைபிள் நீட்டியபடி "ஏய் ஏய் பிள்ளையை சுடு என வற்புறுத்தினார்கள்.

### மனைவியும் பிள்ளையும் இல்லையென்றால்!

'ஆச்சி ஆச்சிப்பிள்ளையை வேண்டு' என்று துவக்கினால் காட்டினார்கள். நான்பிள்ளையை கொடுக்கவும் இல்லை. ஆச்சி பிள்ளையை வாங்கவில்லை. என் துடையில் இரு தடவை றைபிளால் இடித்தனர். என் பிள்ளையை கொடுத்திருந்தால் என்னை சுட்டிருப்பார்கள். வீட்டைபோய் பார்த்துவிட்டு வந்து கறுப்புப்பட்டி' அணிந்தவர் சுடவேண்டாம்எனத்தடுத்தவர். அவர்தான் முதலில் சுடவந்தவர். மனைவியும், கீழே இருந்துவிட்டார். என்னை முதலில் சுட்டுப்போட்டு அவரைச் சுடுங்கள் என்று என் மனைவி கூறினார். மனைவியும், பிள்ளையும் இல்லாவிட்டால் என்னைத் தொலைத்திருப்பார்கள். 14 சாக்கு மிளகாயும், 5 மூடை நெல்லும் இருந்தது. வீட்டை 'கடபுட' என்று சோதித்தார்கள், படங்களை அடித்துஉடைத்தார்கள். சயிக்கிளை உடைத்தார்கள். வீட்டுக்கு நெருப்பு வைத்துவிட்டுப் போனார்கள். எனக்கு பத்தாயிரம் நஷ்டம் ஏற்பட்டது. உள் அறையை விட வெளியறைச் சாமான் எரிந்துவிட்டது.

### கிடங்கில் படுத்தேன்

வவுனிக்குளத்தைச் சேர்ந்த இளையகுட்டி சதாசிவம் கூறியதாவது: ஆகஸ்ட் மாதம் 29ம் திகதி காலை 7மணிக்கு வெடிச் சத்தம் கேட்டது. என்வீட்டிற்குள் துவக்குடன் ஒரு ஆமிக்காரர் வந்தார். நான் போய் கிடங்கிற்குள் படுத்துவிட்டேன். அப்படி படுக்காவிட்டால் சுட்டிருப்பார்கள். வீட்டில் என் சொத்துக்கள் இருந்தது. வீட்டுக்குள் சத்தம் கேட்டது. அரைமணி நேரத்தால் போய்ப் பார்த்தபோது. சாமான்கள் எரிந்துகிடந்தது. 4000 ரூபா நஷ்டம் ஏற்பட்டது.

### மாறிமாறி அடித்தார்கள்

மாங்குளத்தைச் சேர்ந்த ரயில் ஊழியர் சதாசிவம் சற்குணராசா அழுதழுது கூறியதாவது: ஆகஸ்ட் 17ம் தேதி காலை 4 மணிக்கு வேலைக்குப் போய் வேலையைப் பாரம் எடுத்தேன். யாழ்தேவி' வரமணி அடித்துச் சத்தம் கேட்டது. நான் கந்தோரிலிருந்து புறப்பட்டேன். பொலிஸ், ஆமி ஜீப்பில் வந்தது. முன் ஆசனத்தில் இருந்தவர் துவக்கைக் காட்டிவரும்படி கூப்பிட்டார். சுடப்போகிறார்கள் என நினைத்துக் கையை உயர்த்திச் சுடவேண்டாம் எனக் கெஞ்சினேன். பின்னால் இருந்தவர்களும் துவக்கை நீட்டினார்கள். எங்கே வேலைசெய்கிறாய்? என்று கேட்டார்கள் ரயில் ஊழியன் என்றுகூறினேன். 'பறதமிழா, என்று கூறிக்கொண்டு ஓடி வந்து தலையில் அடித்தார்கள். துவக்குப்பிடியால் அடித்தார்கள். சலவைத் தொழிலாளி சீலை வெளுப்பதுபோல் மாறி மாறி அடித்தார்கள். ஐயோ அடிக்கவேண்டாமென்று கை தூக்கிக் கும்பிட்டேன்.

சப்பாத்தால் தலையில் மிதித்தார். பின் கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோனது தெரியாது. ஆஸ்பத்திரியில் மயக்கம் தெளிந்தது. தலைமயிர் வெட்டப்பட்டு, கை கால் கட்டப்பட்டுக் கிடந்தேன். பின் யாழ்ப்பாண ஆஸ்பத்திரிக்கு அனுப்பினார்கள். 9 நாள் சிகிச்சை பெற்றேன். 34 நாட்கள் கந்தோர் போகமுடியாமல் போய்விட்டது.

நான் கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் இருந்தபோது இரண்டு பொலிசார் யாருக்கு ஆமி அடித்தது? என்று கேட்டார்கள். கையால் என்னைக் காட்டினேன். 'நீ தாக்கப்படவில்லை மாங்குளம் பற்றி எரிகிறது" என்று சொல்லிவிட்டுப் போனார்கள். நீர் இறக்கவில்லை. அதனால் வாக்குமூலம் எடுக்கவில்லையென்றும் சொன்னார்கள்; பொலிசார் என் வாக்குமூலத்தைப் பதிவுசெய்யாததால் எனக்கு நஷ்டஈடு கிடைக்கவில்லை."

# "தீ வைத்தவர்களே யார் வைத்தது எனக்கேட்டனர்"

முல்லைத்தீவைச் சேர்ந்த சந்தியாகோ செபமாலை சன்சோனிக் கமிஷன்முன் கூறியதாவது:

'ஆகஸ்ட் 20ம் தேதி இரவு நான்கு இராணுவத்தினர் வந்தனர் 2 பேர் வீட்டுக்குமுன்னால் நின்றனர். என் வீட்டிற்கு நெருப்பு வைத்துவிட்டு ஓடிவிட்டார்கள். இராணுவத்தினர் கைச்சட்டை மடித்திருந்தனர். நிலவு இருந்தது. அதில் அடையாளம் கண்டேன். இதனால் என் வீடு முற்றாக எரிந்துவிட்டது. பின் திரும்பிவந்து "யாரடா கொளுத்தினது" என்று கேட்டார்கள். எங்களுக்கு தெரியாதென்றோம். நீங்கள்தான் கொளுத்தினீர் என்று சொல்ல பயமாக இருந்தது. 8000 ரூபாய் நஷ்டம்.

### இறைபுகழ்வாழிமீது குற்றப்பத்திரிகை

(யாழ்ப்பாணம்)

சுதந்திர தினத்தன்று புங்கங்குளம் சந்தியிலிருந்து அடிமை ஊர்வலம்" நடத்தி, பிரதான வீதியில் வைத்து பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்ட திரு. ஏ. க. கு. இறைபுகழ்வாழி மீது இன்று யாழ். நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படும்.

### ஓடச்—

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வத்தினர் சுட்டனர், இரண்டடி எடுத்துவைக்கு முன் சுட்டு வீழ்த்தினர். இதனால் பயமடைந்து காட்டுக்குள் ஓடினேன். நான் காட்டில் 48 மணிநேரம் தண்ணீர்கூட இல்லாமல் இருந்தேன்.

ஆகஸ்ட் 31-ம் திகதி பொலிஸார் வந்து விசாரணை செய்தனர். மன்னார் நீதவான் வந்து விசாரணை நடத்தினர். நான் சமுகமளித்திருந்தேன்.

### சட்டத்தரணி கூறியது

வவுனிக்குளத்தில் 5 பேர் கொல்லப்பட்டதாகவும், 2பேர் சிதபுரத்திலும், 3 பேர் செல்வபுரத்திலும் கொல்லப்பட்டதாகவும் சட்டத்தரணி ராஜன் செல்லத்தம்பு கூறினார்.

5 மரணங்களும் ஒன்றாக விசாரணை செய்யப்பட்டதாகவும், வெவ்வேறான இடத்தில் விசாரணை நடந்ததாகவும் கூறினார்.

இந்த மரண விசாரணையின் பிரதிக்கு விண்ணப்பித்திருப்பதாக, சட்டத்தரணி எஸ். சி. சந்திரகாசன் கூறினார்.

மரண விசாரணையில் என்ன தெரிவிக்கப்பட்டுள்ளதென்பதை பார்க்க விரும்புவதாக கமிஷனர் தெரிவித்தார்.

# மன்னார் எம். பி. இன்று சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

மன்னார் எம் பி சூசைதாசன் சன்சோனிக் கமிஷன் முன் இன்று காலை சாட்சியமளிப்பார்.

இவரைத் தொடர்ந்து மன்னார் சம்பவங்கள் தொடர்பான சாட்சியங்கள் பதிவு செய்யப்படும், சட்டத்தரணி எஸ் ஜெ சந்திரகாசன் மன்னார் தொடர்பான சாட்சியங்களை வழிநடத்துவார்.

நேற்று திரு. சந்திரகாசனும் மற்றும் மன்னார் சம்பவங்கள் தொடர்பான சாட்சிகள் வந்திருந்தபோதிலும், இந்தச் சாட்சியங்கள் எடுக்கப்படவில்லை.

முல்லைத்தீவு சம்பவங்கள் தொடர்பான சாட்சியங்கள் முடிவடைந்தன, மன்னார் எம் பி திரு சூசைதாசன் முல்லைத்தீவு எம் பி திரு எக்ஸ் எம் செல்லத்தம்பு ஆகியோர் நேற்று வந்திருந்தனர்

இந்து இளைஞர் சார்பில் கலவரத்தினால் பாதிக்கப்பட்ட சைவக்கோவில் குருக்கள்மார் நேற்று சாட்சியமளித்தனர். சட்டத்தரணி ஆர் பாலசுப்பிரமணியம் இச் சாட்சிகளை வழிநடத்தினார்,

## ரூ 100 ...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

இறைச்சிக்காக ஒரு பசுமாட்டை வெட்டியதாகக் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

150 ருத்தல் மாட்டிறைச்சியும், 4 கத்திகளும், கைக்கோடரியும், தராசும் சங்கானை இன்ஸ்பெக்டர் இராசையாவினால் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

எதிரிகள் சார்பில் சட்டத்தரணி எஸ். சிறிதரன், சட்டத்தரணி செல்வி ஆர். அந்தோனிப்பிள்ளை ஆகியோர் ஆஜரானார்கள். மாட்டிறைச்சி வெட்ட அனுமதி கோரி ஏற்கனவே விண்ணப்பித்துள்ளதாக, எதிரிகள் சார்பில் தெரிவிக்கப்பட்டது. எதிரிகள் குற்றத்தை ஒப்புக்கொண்டனர்.

# "ஆமிக்காரர் கடைக்கு நெருப்பு வைத்தார்?"

[யாழ்ப்பாணம்]

"ஜீப்பில் ஆமிக்காரர்கள் வந்தார்கள். நான் பயந்து ஒடைக்குள் ஒளித்தேன். ஒரு ஆமிக்காரர் கடைக்கு நெருப்பு வைத்தார்".

இவ்வாறு சன்சோனிக் கமிஷன் முன் சாட்சியமளித்த மாங்குளத்தைச் சேர்ந்த தம்பையா சுந்தரலிங்கம் என்பவர் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது! ஆகஸ்ட் 29-ம் தேதி மாங்குளம் சந்தியில் ஆமிக்காரர் வந்தனர் துணுக்காய் நோக்கிச் சென்றனர்: கடையை எல்லாம் பூட்டும்படி 2 ஆமிக்காரர் கூறினர்கள். நாங்கள் பக்கத்தில் கடைகளைப்பூட்டிவிட்டு முன்பக்கத்தில் நின்று கதைத்துக் கொண்டிருந்தோம் என்கடை அன்று எரிக்கப்பட்டது. ஜீப்பில் 8 ஆமிக்காரர்கள் இறங்கி வந்தார்கள். நான் பயந்து ஒடைக்குள் ஒளித்து நின்றேன். அப்போது ஒரு ஆமிக்காரர் போய் கடைக்கு நெருப்பு வைத்தார். ஜீப் நம்பர் 31 ஸ்ரீ 454 இது இலகா ஜீப். ஆமிக்காரர் இருந்தனர்

கமிஷனர்: எந்த இலகா?

இங்களத்தில் எழுதியிருந்தது. லாண்ட் டிப்பாட் மெண்ட் ஜீப்பாக இருக்கலாம்

முதல் நாள் மாங்குளம் பொலிஸ் நிலையத்தைச்சேர்ந்த குணவர்தன சிங்களத்தில் சிங்களவரின் கடையை எரித்துப்போட்டீர்கள் உங்கள் கடை எரிப்பது கஷ்டமல்ல, நாளைக்கு தெரியும் என்று கூறினார்.

அவர் கான்ஸ்டபிள் வேலை மட்டுமல்ல மரக்கறி வியாபாரம் செய்து வந்தார் அவர் துவேஷம் உள்ளவர் தரம் குறைந்த மரக்கறியை எனக்கு தந்து மாற்றுவார் எரித்த பின் கடைக்கு முன் நிற்கையில் கான்ஸ்டபிள் குணவர்தன வந்து பிஸ்னஸ் எல்லாம் எப்படியிருக்கு என்று சிங்களத்தில் கேட்டார். கடைகள் எரிந்தது பற்றிமாங்குளம் பொலிஸில் புகார் செய்தேன்.

ஹெலிகேப்டர் மாங்குளத்தில் வந்து இறங்கியது பொலிஸ் ஆமி உயர் அதிகாரிகள் வந்தனர். கடை எரியும் போது நின்ற ஆமிக்காரர், மாங்குளம்பொலிசில் நின்றனர்

ஹெலிகோப்டரில் வந்தவர்களிடம் நடந்ததைச் சொன்னேன். இன்ஸ்பெக்டர் வந்தவர்களை கூட்டிச் சென்றார். வந்தவர்களில் ஒருவர் சிங்களவரின் கடையா தமிழரின் கடையா எரிந்தது என்று கேட்டார். நான் தமிழரின் கடை என்றேன். என்கடையில் வைத்ததுதான் மாங்குளம் எல்லாம்பற்றி எரிவதாக கூறினார்.

பெரிய உத்தியோகத்தர் இருக்கிறபடியால் விடுகிறோம் இல்லாவிடில் தொலைப்போம் என்று ஆமிக்காரர் ஒருவர் ஜீப் சாரதிக்கு சொன்னார். பின் பொலிஸ்நிலையத்தை விட்டு வெளியேறினேன். எனக்கு 12,000 ரூபா நஷ்டமேற்பட்டுள்ளது.

நாளை காலை சாவகச்சேரி எம் பி திரு வி என் நவரத்தினம், இனக்கலவரங்கள் மீண்டும் தலைதூக்காமலிருக்கும் வழிவகைகளை கூறுவார். நாளை வவுனியா சப் இன்ஸ்பெக்டர் நாதன் குறுக்கு விசாரணை செய்யப்படுவார்.

யாழ்ப்பாணத்தில் விசாரணை இம்மாதம் 11ம் தேதியுடன் முடிவடைகிறது. அனுராதபுரத்தில் 24ம் தேதி ஆரம்பமாகும்.

## மன்னார்ப் பொலிஸ் பற்றி 8 புகார்கள்

[யாழ்ப்பாணம்]

துணுக்காய் உதவி அரசாங்க அதிபர் திரு. முருகுப்பிள்ளை கார்த்திகேசு, சன்சோனிக் கமிஷன் முன் கூறியதாவது:

"துணுக்காயில் நான் பதவியிலிருந்தபோது, மன்னார் பொலிசார் பற்றி எனக்கு 8 புகார்கள் கிடைத்தன.

"மன்னார்ப் பொலிசார், துணுக்காய்ப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க ஊழியர்களைத் தாக்கியதாக அப்புகாரில் கூறப்பட்டிருந்தது. பொலிசார் மக்களைத் தாக்கிக் காயப்படுத்தியதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. அம்பலவாணர், பீ. சிவராசா, எஸ். இரகுநாதன் மற்றும் பலர் புகார்செய்திருந்தார்.

"மன்னார்ப்பகுதியிலிருந்து பொலிசார் வந்ததாக அவர்கள் தெரிவித்தனர். மாங்குளம் பொலிசாருக்கு இது பற்றித் தெரிவித்தேன்

## சைக்கிளைத் திருடியவருக்கு ஒத்திவைப்புச் சிறை

(யாழ்ப்பாணம்)

சைக்கிள் திருட்டு வழக்கில் குற்றவாளியாகக்காணப்பட்ட எதிரிக்கு 6 மாத ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது

இவ்வழக்கு, மல்லாகம் பதில் நீதவான் ஜி. வி. பாலசிங்கம் முன்னிலையில் விசாரணைசெய்யப்பட்டது.

இவ்வழக்கில், கொட்டடியைச் சேர்ந்த கிருஷ்ணராசா மஹேஸ்வர் என்பவர், தெல்லிப்பளையைச் சேர்ந்த பாலசுப்பிரமணியத்தின் 500 ரூபா பெறுமதியான சைக்கிளைத் திருடியதாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

## உருளைக்கிழங்கு திருட முயற்சி: 1வருட கடுழியம்

(யாழ்ப்பாணம்)

உருளைக்கிழங்கு திருடமுயற்சித்ததாக குற்றம்சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் எதிரிக்கு ஒரு வருட கடுழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது!

இவ்வழக்கு மல்லாகம் பதில் நீதிபதி திரு ஜி வி பாலசிங்கம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில் நாவற்குளியை சேர்ந்த தம்பித்துரை பாலசிங்கம் என்பவர் உருப்பராயைச் சேர்ந்த கந்தையா இரத்தின

8-ம் பக்கம் பார்க்க


# ஹொண்டா

## உலகிலேயே 1-வது


உலகில் தயாரிக்கப்படும் மோட்டார் சைக்கிள்களில் மூன்றில் ஒன்று ஹொண்டா ஆகும். பல்லாண்டுகளாக உலகின் மோட்டார்சைக்கிள் உற்பத்தி செய்யும் அதி பெரிய தாபனமாக விளங்கி வருவது ஹொண்டா. ஹொண்டா கம்பெனி, ஆண்டுதோறும் 20 இலட்சம் மோட்டார் சைக்கில்களை உற்பத்தி செய்கிறது. நீடித்த உழைப்பிற்கும் நம்பகத்தன்மைக்கும், ஒப்பற்ற சிக்கனத்திற்கும் பெயர் பெற்ற 4 ஸ்ட்ரோக் இயந்திரங்களில் காணப்படும் அதிசிறந்த மேம்பாடுடைய தொழில் நுட்ப அம்சங்களின் விளைவாகவே இவ்வளவு தூரம் முன் நிற்கிறது.

பலதரப்பட்ட மாடல்களைக் கொண்ட மோட்டார் சைக்கிள்களின் முதல் தொகை சிக்கன விலையில் அதி விரைவில் வந்திறங்கவுள்ளது.

உடனடியாக உங்கள் தேவைகளை ஒதுக்கிக்கொள்ளுங்கள். உலக முன்னோடிகளுள் நீங்களும் ஒருவராகுங்கள்.

சிறந்ததையே வாங்குவோருடன் நீங்களும் சேருங்கள்.

இப்பொழுது ரூபா நாணயத்தில் அனைவருக்கும் கிடைக்கும்



### விற்பனையாளர்கள்

இலங்கையில் மிக வேகமாக விற்பனையாகும் மோட்டார் சைக்கிள்களுக்கு விற்பனையாளர்கள் தேவை.

ஸ்டபோர்ட் மோட்டார் கம்பனி லிமிட்.
"ஹொண்டா ஹவுஸ்"
718/7, மருதானை ரோட், கொழும்பு - 10.
தொலைபேசி : 94362

### இலங்கை வர்த்தக வலயத்தில்

# இந்திய முதலீடு பற்றி ஆராய இந்திய உயர்குழு வருகிறது

## சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தை விரைவு படுத்த நடவடிக்கை

புதுடில்லி, ஏப் 6 இலங்கையில் அமைக்கப்பட இருக்கும் சுதந்திர வர்த்தக வலயத்தில் முதலீடு செய்வது பற்றி ஆராய இந்திய அதிகாரிகள் குழு ஒன்று இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளது.

இக்குழுவில் இந்திய அரசு நிறுவனங்களினதும் தனியார் துறையினரையும் சேர்ந்த வர்த்தக நிபுணர்கள் அங்கம் வகிப்பர்.

இலங்கை வெளிநாட்டமைச்சர் ஜனாப் ஏ ஸி எஸ் ஹமீட்டும், இந்திய வெளிநாட்டமைச்சர் பி. ஏ. பி. வாஜ்பாயும் நடாத்திய பேச்சுவார்த்தைகளை அடுத்தே இக்குழுவை இலங்கைக்கு அனுப்புவதென இந்திய அரசு தீர்மானித்துள்ளது.

### சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தம்

1964ம் ஆண்டு இரு நாட்டுத் தலைவர்களுக்குமிடையே செய்துகொண்ட சிறிமா-சாஸ்திரி ஒப்பந்த விதிகளை நடைமுறைப்படுத்துவதை விரைவுபடுத்துவதற்காக உயர் அதிகாரிகளைக் கொண்ட கமிட்டி ஒன்றை அமைப்பதென்றும் இரு நாடுகளின் வெளிநாட்டமைச்சர்களும் முடிவுசெய்தனர். (இ)

## எம். ஜி. ஆர்.-மொரார்ஜி சந்திப்பு

புதுடில்லி, ஏப். 6 தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் நேற்று புதுடில்லியில் இந்தியப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாயைச் சந்தித்து பேச்சு நடத்தினார்

இவர்களது பேச்சுவார்த்தை 15 நிமிடங்கள் நடைபெற்றன. (இ)

# அண்ணா நினைவு பல்கலைக்கழகம்

சென்னை, ஏப். 6 பேரறிஞர் அண்ணாதுரையின் நினைவாகச் சென்னையில் தொழில் நுட்பப் பல்கலைக்கழகம் ஒன்று நிறுவப்படவுள்ளது.

"அண்ணாதுரை தொழில் நுட்பப் பல்கலைக்கழகம்' எனப் பெயரிடப்பட்ட இப்பல்கலைக்கழகத்தை அமைப்பதற்குத் தமிழ்நாடு சட்டசபை நேற்று அங்கீகாரம் வழங்கியுள்ளது.

பொறியியல், தொழில் நுட்பம் ஆகிய துறைகளிலும், அதைச் சார்ந்த துறைகளிலும் இப்பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படும் என்று தமிழ்நாடு அரசு அதிகாரி ஒருவர் தெரிவித்தார் (இ)

### "கைது செய்து பிணையில் விட்டனர்;

# ஆனால் இதுவரைவேறு நடவடிக்கை இல்லை"

## முல்லைத்தீவு கார் உரிமையாளர் கூறியது

முல்லைத்தீவைச்சேர்ந்த ராமுப்பிள்ளை சுந்தரலிங்கம் சன்சோனிக்கமிஷன்முன் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

"வட்டுவாகலில் என்வீடு இருந்தது. என்னிடம் கார் ஒன்று உண்டு. முல்லைத்தீவிலிருந்து வழக்கொன்றுக்காக சந்தேகநபர்களை கோர்ட்டின் கட்டளைப்படி யாழ்ப்பாணம் கொண்டுசென்றேன். பின் திரும்பிச் சென்றேன். மற்றவர்கள் பயத்தால் கார் விடவில்லை. பின் யாழ்ப்பாணத்திலிருந்து திரும்பி வந்தேன், அந்தநேரம் ஊரடங்குச் சட்டம் இருந்தது. என்னிடம் பெர்மிட் இருந்தது.

ஆகஸ்ட் 25ம் தேதி முல்லைத்தீவு எம் பி யை வவனியா கொண்டுசென்றேன். ஆத்திக்குளத்திலிருந்து ஒரு அகதிக் குடும்பத்தை முல்லைத்தீவு கொண்டுசென்றேன், பின் எனது காரைத் திருத்துவதற்கு யாழ்ப்பாணம்கொண்டு சென்றேன். செப்டப்பர் 4-ம் தேதி காரைக் கொண்டுவந்தேன். எனது காரில் முல்லைத்தீவு எம் பியை வவனிக்குளத்திற்குக் கொண்டுசென்றேன்; அதற்குமுன் என் வீட்டுப் பாதுகாப்புக்கு நடவடிக்கை எடுத்தேன். என் தம்பியை வீட்டைப் பாதுகாக்கும்படி சொன்னேன், பின் துணுக்காய் சென்றேன். இதன் பின்னர் இரவு ஒரு மணிக்கு வந்தேன், முல்லைத்தீவு எம் பி கப்டன் ஜெயசுந்தராவிடம் போனார், நான் காரில் இருந்தேன். அவர் கப்டன் ஜெயசுந்தராவிடம் கதைத்துக் கொண்டிருக்கபோது தூரத்தில் நெருப்பு எரிந்தது. பொலிஸார் ரோட்டில் வந்து பார்த்தார்கள். ஜீப்பில் சென்றனர். எம் பி காரில் ஏறி வீட்டுக்குப் போனார். எம் பியை வீட்டில் இறக்கிவிட்டு நான் என் வீட்டிற்குச் சென்றேன்.

அன்றிரவு சத்தம் கேட்டது வெளியில் நின்று நான்தான் என்று கேட்டது, கதவைத் திறந்தேன், வெளியில் உயர் அதிகாரி ஒருவர் நின்றார், இராணுவத்தினரும் நின்றனர் என் படுக்கையைக் கிளப்பிப் பார்த்தார்கள். அவர்களிடம் யந்திரத் துப்பாக்கி இருந்தது. என் கையை அவர் பிடித்து மணந்து பார்த்தார். பின் காரைக் காட்டச் சொன்னார்கள், ஜீப்பில் ஏறச்சொன்னார்கள், என் தம்பியும் நின்றார், காரைக்காட்டினேன், என்னை ரிமாண்டில் வைத்தார்கள், மற்றநாள் கோர்ட்டிற்குக் கொண்டுவந்தார்கள். பிணையில்விட்டார்கள், இன்றுவரை எனக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவில்லை, 7 மாதமாகியும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

முல்லைத்தீவைச்சேர்ந்த இராமுப்பிள்ளை சண்முகலிங்கம் கூறியதாவது; சுந்தரலிங்கம் என் சகோதரர், செப்டம்பர் 4ம் தேதி நான் அவர் வீட்டில் போய்ப் படுத்திருந்தேன், பயணம்போகிறேன் வீட்டில் போய்ப் படுக்கும்படி சொன்னார், பின் அண்ணன் வந்தார் அம்மா வீட்டில் வழக்கம்போல் கார் விடப்பட்டது; இரவு இன்ஸ்பெக்டரும் உயர் அதிகாரியும், இராணுவத்தினரும் வந்தனர். மறுநாள் எம் பிக்குப் புகார்செய்தேன்.

முல்லைத்தீவைச் சேர்ந்த ரிச்சாட் ராசநாயகம், ஒரு உயர் அதிகாரி தொடர்பாகச் சாட்சியமளித்தார்

முல்லைத்தீவைச் சேர்ந்த பிலிப் மர்க்குப்பிள்ளை கூறியதாவது: ஆகஸ்ட் 28ம் தேதி வாடிவீட்டிற்கு அப்புக்காத்து ஆலாலசுந்தரத்தை வழக்கு விஷயமாகச் சந்திக்கச் சென்றேன், அவர் வரவில்லை. நான் திரும்பிவந்தேன், அப்போது அங்கு ராசநாயகம் வந்தார், ராசநாயகம் ஒரு உயர் அதிகாரியுடன் கதைத்துக்கொண்டிருந்தார்? பின் வந்துவிட்டேன்.

# முன் கதவை உடைத்தனர் பின்கதவால் ஓடிவிட்டோம்

(யாழ்ப்பாணம்)

கொழும்பைச் சேர்ந்த வயிரமுத்து நடராசா சன்சோனிக் கமிஷன் முன் கூறியதாவது:-

"ஆகஸ்ட் 77ல் கொட்டியனித் தெருவில் வசித்துவந்தேன். அங்கு 3 தமிழ்க் குடும்பங்கள் இருந்தன. ஆகஸ்ட் 22ம் தேதிவரை கலவரம் இல்லை அன்றிரவு 7 மணிக்கு ஒரு கூட்டம் வந்து முன் கதவை உடைத்தது. நாங்கள் பின்னால் ஓடிவிட்டோம். பின் வீட்டில் உள்ளவர்கள் பாதுகாப்பளித்தனர். பின் பொலிஸ் 'ஜீப்' வந்தது. மறுநாள் பாதுகாப்புக் கேட்டேன். ஊரடங்குச் சட்ட நேரம் முடிய பொலிசார் போய்விட்டனர். அதன் பின் குண்டர்கள் வந்து வீட்டைத் தாக்கினர். இதனால் நாங்கள் வேறு வழியின்றி வெள்ளவத்தை முகாமிற்குச் சென்றோம். பின் யாழ்ப்பாணம் வந்தோம்; என் சொந்த வீடு முழுவதும் சேதமடைந்தது. பொருட்களும் கொள்ளையடிக்கப்பட்டன எனக்கு 50,000 ரூபா நஷ்டம். நான் கட்டடத் திணைக்களத்தில் படம் வரைபவராகக் கடமையாற்றுகிறேன்.

# இன்ஸ்பெக்டராக..

(3ம் பக்கத் தொடர்ச்சி)

சட்: 16-ம் திகதி என்ன கடமை? பொறுப்பதிகாரியாக இருந்தேன்

சட்: தொலைபேசி எந்த நேரத்திலும் பழுதடையவில்லை? இல்லை

சட்: வேலை செய்தது? பழுதடையாவிட்டால் வேலை செய்யும்

சட்: பொதுமக்கள் பொலிசாருக்கு போன்பண்ணுவதில் கஷ்டம் இருக்கவில்லை? இல்லை

சட்: டி ஐ ஜிக்கு ஒரு தகவல் அனுப்பப்பட்டது? ஆம்

சட்: அந்நேரம் டி ஐ ஜி யாழ்ப்பாணத்தில் இருந்தார்? -ஆம்

சட்: அனுப்பும்போது நின்றீரா? ஆம்

சட்: எஸ் பி யிடம் செல்ல வேண்டுமானால் மேல்மாடிக்குச் செல்லவேண்டும்? ஆம்

## எஸ். பி. க்கு அறிவிக்கவில்லை

சட்: எஸ் பி யுடனோ தலைமைக்காரியாலய இன்ஸ்பெக்டருடனோ நீர் தொடர்புகொள்ளவில்லை? இல்லை

சட்: நீர் எஸ் பியை சந்திக்கவில்லை? இல்லை

சட்: இரண்டாவது தகவலுக்கு எஸ் பி யின் அனுமதி பெறவில்லை? இல்லை

சட்: நீர் அறிவித்தீர்? அவர்களுக்குத் தெரியும்

சட்: எஸ் பிக்கு நீர் அறிவித்தீரா? இல்லை

சட்: அது பாரதூரமான தகவல்? இருக்கலாம்

சட்: பொய்த்தகவல் பாரதூரமானது? ஆம்

சட்: தலைமைக்காரியாலய இன்ஸ்பெக்டரிடம் சொல்லவில்லை? இல்லை

சட்: யாழ்ப்பாணத்திலிருந்த டி ஐ ஜிக்கும் கூறவில்லை? இல்லை

சட்; எஸ் பிக்கும் சொல்லவில்லை? இல்லை

சட்: மேலும் தகவல் அனுப்பவில்லை? இல்லை

சட்: ஏன்? வேறு தகவல் இல்லை

சட்: எல்லாப் பதிவுப் புத்தகங்களையும் எஸ் பி பார்ப்பாரா? தலைமைக்காரியாலய இன்ஸ்பெக்டர்தான் தினமும் பார்ப்பார். எஸ் பி தினமும் பார்ப்பதில்லை.

## திலகர் வீட்டில்

சட்: திலகர் வீட்டில் றைபிள் எடுத்ததுபற்றி என்றி இருக்கிறதா? எனக்குத் தெரியாது

சட்: அதுபற்றி விசாரணை நடந்ததா? ஆம்

சட்: என்ன நடந்தது? தெரியாது

சட்டத்தரணி சரத் சில்வா: இப்போது நீர் இன்ஸ்பெக்டராக இருக்கிறீரா? ஆம்.

சட்: டிசம்பருக்கு முன் சப் இன்ஸ்பெக்டராக இருந்தீரா?-ஆம்

சட்: எஸ் ஐயாக இருந்து 6 வருடங்களுக்கு முன் இன்ஸ்பெக்டரானீர்? ஆம்

சட்: இது வழக்கமான பதவி உயர்வுதான்?-ஆம்

சட்: விசேஷமாக எதுவுமில்லை?-இல்லை

சட்: குமாரசாமி இத்தகவல் அனுப்பும்போது நீர் இருக்கவில்லை?-இல்லை

சட்: உமக்கு முன் கொடுத்தாரா?-இல்லை

சட்: குமாரசாமி இத்தகவல் பற்றி உம்மிடம் ஆலோசனை கேட்டாரா? இல்லை.

சட்: நீர் அன்று கடமையிலிருந்தீர்?-ஆம்.

சட்: உமக்கு அத்தகவல் பற்றித் தெரியாது?-ஆம்

சட்: கொழும்பிலிருந்து கேட்டபோதுதான் அதுபற்றி அறிந்தீர்?-ஆம்

சட்: பதிவிலிருந்தது பொய் என அறிந்தீர்?-ஆம்

சட்: அது பற்றி விசாரணை நடக்கிறது?-ஆம்

## பதவி உயர்வு

சட்டத்தரணி பார்லட்: ஆகஸ்டில் எஸ் ஐயாக இருந்தீர்?-ஆம்

சட்: டிசம்பரில்தான் இன்ஸ்பெக்டரான கடிதம் கிடைத்தது?-ஆம்

சட்: செப்டம்பரில் இன்ஸ்பெக்டரானீர்?-ஆம்

சட்: இது வழக்கத்துக்கு மாறான நடைமுறை?-இல்லை

சட்: யாழ்ப்பாணத்தில் நீர் மட்டும் பதவி உயர்வுபெற்றீர்?-வேறு பலரும்

சட்: குமாரசாமியின் தகவல் பொய்யென்று இங்கு கூறினீர்?-ஆம்

சட்: குமாரசாமியின் தகவல் என்று எப்படி உமக்குத் தெரியும்? (பதிலில்லை)

சட்: குமாரசாமியின் சொந்தத் தகவல் என்றீர்?-தெரியாது

சட்: குமாரசமியை இந்த விஷயத்தில் மாட்டிவிட்டீர்?-இல்லை

சட்: அப்பாவி குமாரசாமியை அநாவசியமாக இதில் இழுக்கப்பார்க்கிறீர்? இல்லை.

## நீதிபதிகள் இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

மல்லாகம் மாவட்ட நீதிபதியாகக் கடமையாற்றிய திரு. எம். டி. யேசுரத்தினம் இம்மாதம் 3-ம் திகதி முதல் பருத்தித்துறை மாவட்ட நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார். திரு எஸ். ஆனந்தகுமாரசுவாமி மல்லாகம் மாவட்ட நீதிபதியாகக் கடமையாற்றுவார்.

திரு. ஜி. வி. பாலசிங்கம் ஜே. பி. யு. எம். நாளை ஏப்ரல் 8-ம் திகதி முதல் 17-ம் திகதி வரை மல்லாகம் பதில் மாவட்ட நீதிபதியாகவும் மாஜிஸ்திரேட்டாகவும் கடமையாற்றுவார்.

## காப்புத் திருட்டு: 10ந் திகதி விசாரணை

(மட்டுவில்)

மட்டுவில் பன்றித்தலைச்சி அம்பாள் ஆலயத்தில் நடைபெற்ற காப்புத் திருட்டுச் சம்பந்தமாக விசாரணைசெய்யும் போது, ஆண் பெண்ணாக மாறிய சம்பவம் வாசகர் அறிந்ததே. அத்திருட்டுச் சம்பந்தமான வழக்கு விசாரணை இம்மாதம் 10ந் தேதி மேற்படி ஆலய நீதிமன்றத்தில் நடைபெறும்.

இவ்வழக்கு இம்மாதம் 8ந் திகதி ஆலய நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவிருந்தது. ஆனால் சாவகச்சேரி மாவட்ட நீதிபதி திரு. சே பாலகிட்ணர் விசாரணையை இம்மாதம் 10ந் திகதி வரை ஒத்திவைத்தார்.

**வெல்லி** (காலிவீதி)
இன்று மட்டும்
தினசரி: 6-30, 9-30
எஸ்,எஸ். ஆர். விஜயகுமாரி
நடித்த
**நீங்காத நினைவு**

4-வது வாரம்
**புலோலி சினிமாஸ்** (பருத்தித்துறை)
தினசரி 6-30, 9-45,
சனி, ஞாயிறு 2-30
ரஜனிகாந்த் - ஸ்ரீதேவி
**மூன்று முடிச்சு**

**நாகம்ஸ்** (சுன்னாகம்)
தினசரி: 6-45, 10-00
ஜெமினி - ஜெயந்தி
நடித்த
**புன்னகை**

**Rio** (Jaffna) (phone:7607)
Daily 4 Shows
**DOG POWND SHUFFLE**

**வின்ஸர்** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ரவிச்சந்திரன், கே ஆர். விஜயா, விஜயகுமார், நிர்மலா, அசோகன்
நடித்த
**ஜானகி சபதம்**

**சாந்தி** (யாழ்: நகர்) போன்: 7642
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
சிவாஜி...... ஜெமினி...... சாவித்திரி
A. P. நாகராஜனின் (கலர்)
**கந்தன்கருணை**
8ம், 9ம் திகதிகளில் காலை 8-30 மட்டும்
**Santa and the three bears**

**ராஜா** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ஜெமினி — சாவித்திரி
நடித்த
**ஆயிரம் ரூபாய்**

**மனோகரா** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம்: ஜி. ஆர்:--வாணிஸ்ரீ
நடித்த
**ஊருக்கு உழைப்பவன்**

காட்சிக்கு காட்சி ஹவுஸ்புல்
இதன் மர்மம் என்ன?
**ஸ்ரீதர்** (யாழ்ப்பாணம்)
4 காட்சிகள்
எம்.ஜி.ஆர். - பத்மினி - வீரப்பா
நடித்த
**விக்கிரமாதித்தன்**
(புதிய பிரதி)

**ராணி** (யாழ்: நகர்)
தினசரி 4 காட்சிகள்
ஏ. ஈ. மனோகரன்-சந்திரகலா
நடித்த
**வாடைக்காற்று**

**வெலிங்டன்** (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - விஜயா
**கிரகப்பிரவேசம்** (கலர்)

**லிடோ** (யாழ்: நகர்) போன் 7698
முத்துராமன், சிவகுமார், சுஜாதா
நடித்த
**உறவு சொல்ல ஒருவன்**

**Regal** (Jaffna) Daily 4-45, 7-00 and 9-30 p m.
**ZORROW AT THE COURT OF SPAIN**
(Color)


# விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ் வை எம் சி ஏ யினரின் 11வது உள்ளரங்கு விளையாட்டுவிழாவில் பட்மின்டன், டேபிள் டெனிஸ், செஸ், கரம் போன்ற போட்டிகளில் ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர். இறுதிநாளான பரிசளிப்புவிழாவில் வேம்படி மகளிர் கல்லூரியின் ஓய்வு பெற்ற அதிபர் செல்வி மேபல் தம்பையா பிரதமவிருந்தினராக கலந்துகொண்டார். இறுதிநாளான பரிசளிப்பு விழாவில் மேம்படி மகளிர் கல்லூரியின் ஓய்வுபெற்ற அதிபர் மேபல் தம்பையா பிரதம விருந்தினராக கலந்து கொண்டார். திருகோணமலையைச் சேர்ந்த பல விளையாட்டு வீரர்களும் இப்போட்டிகளில் பங்குபற்றினர்.

இவ் விளையாட்டுப் போட்டிகளில் விசேட பரிசில்கள் பெற்றவர்களின் விபரம் பின்வருமாறு:

சிறந்த மாணவிக்கான பரிசை பவானி சோமசுந்தரமும், சிறந்த மாணவனுக்கான பரிசை அமிர்தலிங்கம் இராமபிரானும், சிறந்த பெண்மணிக்கான பரிசை சரோஜினி நடராஜாவும் சிறந்த ஆண்களுக்கான பரிசை ஜெ அருளானந்தமும் பெற்றுக்கொண்டனர். (இ-உ)

......

# யங்றேயல் சாம்பியன்

(யாழ்ப்பாணம்)

யாழ் அமெச்சூர் உதைபந்தாட்ட லீக் நடத்திய ஏழு பேர் கொண்ட நொக்கவுட் போட்டியில் இறுதிப் போட்டியில் யங்றேயல் விளையாட்டுக் கழகம் 3—1 என்ற கோல் விகிதத்தில், வல்வெட்டித்துறை உதயசூரியன் கோஷ்டியைவென்றது. அமரர் ஜீ. ஜீ பொன்னம்பலம் நினைவுச் சுற்றுக் கிண்ணத்தை இக் கழகம் தம் வசமாக்கிக் கொண்டது. மேற்படி இப் போட்டிக்கு திரு எம். ஏ. இராசேந்திரா மத்தியஸ்தம் வகித்தார்.

பதினாறு கோஷ்டிகள் பங்குபற்றிய மேற்படி போட்டியின் அரையிறுதி ஆட்டங்களுக்குப் பலாலி ஆசிரியர் கலாசாலை, யங்றேயல் விளையாட்டுக் கழகம் வசாவிளான் சைனிங் ஸ்ரார் வல்வெட்டித்துறை உதய சூரியன் கழகம் ஆகியன தெரிவு செய்யப்பட்டன.

இப்போட்டியில் அகில இலங்கை வீரர்களான எஸ்; என் ஜே. அந்தோனிப்பிள்ளை, ஸ்ரீதரன், அகில இலங்கைப் பாடசாலை வீரர்கள் எஸ்; தயானன், என். வித்தியானந்தன் யாழ் மாவட்ட வீரர்கள் ஏ. வி. ஜோன்சன் ஏ. எஸ் இமானுவல் ஏ. அகஸ்தின், கணேசலிங்கம், பி. அந்தனி ஆகியோர் பங்கு பற்றினர்.

பிரதம விருந்தினராக பங்கு கொண்டு இறுதியாட்டத்தில் கலந்து கொண்ட கோஷ்டிகளுக்கு பரிசில்களை வழங்கிய யாழ்ப்பாணம் தேசியபேரவை உறுப்பினர் திரு வெ யோகேஸ்வரன் தமது பேச்சின் போது பாடசாலை நாட்களிலேயே தம்மை அரசியலுக்கும் ஆதே வேளையில் விளையாட்டுக்கும் அர்ப்பணித்த அமரர் ஜீ ஜீ பொன்னம்பலம் நினைவாக இச்சுற்றுக்கிண்ணம் வழங்கப்படுவது மிகப் பொருத்தமானதே என்று குறிப்பிட்டார்.

அமெச்சூர் உதைபந்தாட்ட லீக் மிகவிரைவில் பதினொரு பேர் கொண்ட கோஷ்டிகளுக்கிடையேயான மினி சுற்றுப்போட்டியை நடத்துவதற்கான ஒழுங்குகளும் செய்யப்பட்டுள்ளன. (அ)

## சென்றல் - சென்ஜோன்ஸ்

# இறுதிவரை விறுவிறுப்பாக நடந்த கிரிக்கட் ஆட்டம்

(அரியாலை)

வடமாகாணத்தின் பிரபல கல்லூரிகளான யாழ் மத்திய கல்லூரிக்கும், யாழ் பரியோவான் கல்லூரிக்கு மிடையிலான 80வது வருடாந்த மாபெரும் கிரிக்கட் போட்டி ஆரம்பம் முதல் இறுதிவரை விறுவிறுப்பாக இருந்த போதிலும் வெற்றி தோல்வியின்றியே முடிவடைந்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பரி.யோவான் கல்லூரிக் கோஷ்டி தனது முதலாவது ஆட்டத்தில் 7விக்கட்டுகள் நஷ்டத்திற்கு 192 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது. டி. எம். இரத்தினராசா 102 ஓட்டங்களையும், எல். டி. மகேந்திரன் 27 ஓட்டங்களையும், பெற்றிருந்தனர். பரி. யோவான் கல்லூரிக்கோஷ்டியை எதிர்த்து பந்து வீசிய மத்திய கல்லூரியைச் சேர்ந்த ரி.இதிஸ்கந்தராசா 17 ஓவரில் 37 ஓட்டங்களைக் கொடுத்து 2விக்கட்டுக்களையும், ஏ.பகீரதன் 13 ஓவரில் 44 ஓட்டங்களைக் கொடுத்து 2விக்கட்டுகளையும், ஜி.தோமஸ் 70 ஓவரில் 26 ஓட்டங்களைக்கொடுத்து 3விக்கட்டுகளையும் கைப்பற்றினர்.

தொடர்ந்து விளையாடிய யாழ். மத்திய கல்லூரிக் கோஷ்டி 9விக்கட்டுகள் நஷ்டத்திக்கு 169 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது. ஆர்.பாலகுமார் 38 ஓட்டங்களையும், ஏ. பகீரதன் 55 ஓட்டங்களையும், ஜீ. தோமஸ் வெளியேறுமல் 22 ஓட்டங்களையும் பெற்றனர். மத்திய கல்லூரியை எதிர்த்து பந்து வீசிய பரியோவான் கல்லூரியைச் சேர்ந்த எம். வை. ஏ. பௌஷான் 15 ஓவரில் 34 ஓட்டங்களைக் கொடுத்து 2விக்கட்டுக்களையும், ஜே.செபரெத்தினம் 19 ஓவரில் 43 ஓட்டங்களை கொடுத்து 2 விக்கட்டுக்களை கைப்பற்றினர்.

2வது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய பரியோவான் கல்லூரி 6விக்கட்டுக்கள் நஷ்டத்திற்கு 144 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது எஸ். டி.மகேந்திரன் 30 ஓட்டங்களையும், என். ஆர். சோமசுந்தரம் 35 ஓட்டங்களையும், பெற்றனர். பரியோவான்கல்லூரியை எதிர்த்துப் பந்து வீசிய மத்திய மத்திய கல்லூரியைச் சேர்ந்த ஏ பகீரதன் 10ஓவரில் 26 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கட்டுகளையும், சிறிஸ்கந்தகுமார் 10ஓவரில் 19 ஓட்டங்களைக் கொடுத்து 1விக்கட்டையும், எஸ். பி. பிரேமசந்திரன் 5ஓவரில் 8 ஓட்டங்களைக் கொடுத்து 1விக்கட்டையும், ஆர். பாலகுமார் 45ஓவரில் 19 ஓட்டங்களைக் கொடுத்து 1விக்கட்டையும் கைப்பற்றினர்.

அதனைத் தொடர்ந்து ஆடிய யாழ்.மத்தியகல்லூரி தனது 2வது இன்னிங்ஸில் ஆட்ட நேர இறுதியில் 5விக்கட்டுகளை இழந்து 97ஓட்டங்களைப் பெற்றது. ஜி அனுருத்திரா 33 ஓட்டங்களையும், பி.உதயகுமார் 33ஓட்டங்களையும், ஏ.பகீரதன் 12ஓட்டங்களையும் பெற்றனர். இவர்களை எதிர்த்து பந்து வீசிய பரியோவான் கல்லூரியைச் சேர்ந்த எம். வை. ஏ பௌஷான் 7ஓவரில் 35 ஓட்டங்களைக் கொடுத்து 3விக்கட்டுகளையும், பி.சாந்தகுமார் 5ஓவரில் 24 ஓட்டங்களைக் கொடுத்து 2விக்கட்டுகளையும் கைப்பற்றினர்.

பரியோவான் கல்லூரியைச் சேர்ந்த கிரிக்கட் கோஷ்டித் தலைவர் எம். வை. ஏ. பௌஷான் சிறந்த பந்தெறிவீரனுக்கான திரு. டபிள்யூ.பதமநாதன் சுற்றுக்கிண்ணத்தையும், சிறந்த துடுப்பாட்டக்காரரான டி. எம். இரத்தினராசா திரு.இ. ஏ. டபிள்யூ.எம்வேட் சுற்றுக்கிண்ணத்தையும், மத்தியகல்லூரியைச் சேர்ந்த ஏ கருணாகரன் சிறந்த பந்து தடுப்பு வீரர்க்குரிய டாக்டர் எச். டபிள்யூ. தம்பையா சுற்றுக் கிண்ணத்தையும், எல்லாவகையிலும், சிறந்த வீரருக்கான யாழ். மத்திய கல்லூரி பழைய மாணவர் சுற்றுக்கிண்ணத்தை ஏ. பகீரதனும் பெற்றுக் கொண்டனர். (இ)

• • •

# ஆணையாளர் கோரிக்கை

(வேலணை)

வேலணை முதலாம் வட்டாரத்திலிருக்கும் நவக்கை, ஆலம்புலம் வீதியை நல்ல முறையில் திருத்த அரசாங்கம் நிதியுதவி வழங்கியும் வீதியின் அகலம் போதாமையினாலும், வீதிக்குத் தேவையான காணி இல்லாமையினாலும் வீதி வேலையைச் சரிவரச் செய்யவியலாமலிருக்கிறதாம்.

மேற்படி வேலையைச் செய்து முடிக்க இவ்வீதியிலிருக்கும் மக்கள், இவ்வீதிக்குத் தேவையான காணியை விட்டுக் கொடுத்து இவ்வேலைகளைத் தொடங்க உதவியளிக்கும்படி கிராமசபையின் விசேட ஆணையாளர் திரு. மு. சுப்பிரமணியம் பொதுமக்களைக் கேட்டுள்ளார். (உ)

—

# இன்றைய உற்சவம்

(காரைநகர்)

காரைநகர் மணற்காடு முத்துமாரியம்மன் கோவில் 15ந் திருவிழா இன்று நடைபெறுகிறது. இவ்வைபவத்தையொட்டி திரு. அ. சிதம்பரப்பிள்ளையின் 'தாதையைத் தாளற வீசிய தம்பிரான் அன்பர்' என்னும் பொருள் பற்றிய கதாகாலட்சேபமும், 'அருள் வழங்கும் அம்பிகை' என்னும் பொருள் பற்றி வித்துவான் மு சபாரத்தினத்தின் சிறப்புரையும் இடம்பெறும். (செ)

# தவறிவிட்ட விசாரணைப் பிரதிகள்

(யாழ்ப்பாணம்)

சன்சோனி கமிஷன் விசாரணைப்பிரதிப் புத்தகங்கள், ஏப்பிரல் 1ம் தேதிக்கும் 4ம் தேதிக்கு மிடையில், டாக்ஸி ஒன்றில் தவறிவிட்டதாகவும், இப்பிரதிகளை கண்டெடுத்தவர்கள், யாழ்ப்பாணம் பாம் கோர்ட்டில் சமர்ப்பிக்குமாறும், சட்டத்தரணி த. சோமசுந்தரம் தெரிவிக்கின்றார்.

இப்பிரதிகள், விசாரணையின் 1185 பக்கம் முதல் 1288 பக்கங்களை கொண்டதெனவும், இதில் 15, பிரதிப் புத்தகங்கள் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்,

யாழ் பொது நூலகத்திலிருந்து பாம் கோட்டுக்கு செல்கையில் இவை தவறிவிட்டதாகவும் அவர் தெரிவித்தார். (ச)

# ‘பெற்ரோல் ஊற்றிவீட்டுக்கு நெருப்பு வைத்தார்கள்

## சத்தம் போட்டேன் துவக்கால் அடித்தார்கள்’

(யாழ்ப்பாணம்)

ஜீப்பில் வந்தவர்கள் வெள்ளைப்போத்தலில் பெற்ரோல் கொண்டுவந்து எங்கள் வீட்டிற்கு நெருப்பு வைத்தார்கள். நான்சத்தம் போட்டேன். துவக்கால் அடித்தார்கள்.

கள்ளப்பாட்டைச்சேர்ந்த பெரியசாமி வேலாயுதம் சன்சோனி கமிஷன்முன் சாட்சிய மளிக்கையில் இவ்வாறு கூறினார்.

கள்ளப்பாட்டைச் சேர்ந்த பெரியசாமி வேலாதம் கூறியதாவது! ஆகஸ்ட் 26ம் தேதி வீட்டில் இருந்தேன். விருந்தையில் படுத்திருந்தேன். ஜீப்வந்து வீட்டிற்கு முன்னால் நின்றது. 4பேர் இறங்கி வாடிப்பக்கம் சென்றார்கள். உடனே வாடி எரிந்தது. பின் 4பேரும்எங்கள் வீட்டிற்கு வந்தனர். வாடி செல்லையா மகாதேவாவிற்குச் சொந்தமானது. வெள்ளைப் போத்தலில் பெற்ரோல் கொண்டுவந்து எங்கள் வீட்டிற்கு ஊற்றி நெருப்பு வைத்தார்கள். நாங்கள் சத்தம் போட்டோம். எனக்கு துவக்கால் அடித்தார்கள் ஊரடங்குச் சட்டம் இருந்தது. வெளியில் ஓடமுடியவில்லை நெஞ்சில் உதைத்தார்கள், அன்றிரவு வேறு வீடுகளும் எரிந்தது நல்லதம்பி வாடியும் எரிந்தது. மறுநாள் ஏஜிஏ கந்தோருக்குப் போனேன்.

மணல்குடியிருப்பைச் சேர்ந்த சுவாமிப்பிள்ளை மரியநாயகம் கூறியதாவது! ஆகஸ்ட் 26ம் திகதி இரவு நான் வீட்டில் படுத்திருந்தேன், அப்போது என் தம்பி வாடி வீட்டிலிருந்து வந்து வாடி எரிந்துவிட்டதாகசொன்னார். நான் வீட்டிலிருந்து வாடியைநோக்கிச் சென்றேன், வாடி ஓரத்தில் ஒரு ஜீப் வண்டியைக் கண்டேன், நான் 2பேருடன் தீயை அணைக்க முயற்சித்தேன் முடியவில்லை, மற்றவாடி எரியாதவண்ணம் தண்ணீர் ஊற்றிப் பாதுகாத்தேன் இரண்டு ஜீப்பில் இராணுவம் வந்து, எப்படி எரிந்தது? என்று கேட்டார்கள்? தெரியாது என்றேன், சிங்களவர்கள் வேலைசெய்கிறார்களா? என்று கேட்டார்கள்? இந்த வாடியில் சிங்கள ஆட்கள் இல்லையென்றேன். எரிந்த வாடி சிங்களவருடையதா? என்று கேட்டார்கள் இல்லை என்றேன், உங்களுக்கு கோபக்காரர்கள் இருக்கிறார்களா? என்று கேட்டனர் இல்லை என்றேன் அப்படிக் கோபக்காரர்கள் இருந்தால் வீட்டைக் காட்டு? என்று இழுத்து ஜீப்பில் ஏற்றினார்கள். நான் ஜீப்பில் ஏறவில்லை. பின் விடிந்துவிட்டது.

# ‘இது சிங்களவர் பிரதேசம் உடனே வெளியேறுங்கள்”

## ஜீப்பில் வந்தவர்கள் இப்படிக்கூறினார்களாம்

[யாழ்ப்பாணம்]

இதுசிங்களவருடைய பிரதேசம் உடனடியாக வெளியேறிவிடுங்கள் என்று ஜீப்பில் வந்தவர்கள் கூறியதாக முல்லைத்தீவு அலம்பலைச் சேர்ந்த மீக்கலாபிள்ளை அந்தோனிப்பிள்ளை சன்சோனிக் கமிஷன் முன்சாட்சியமளிக்கையில் கூறினார்.

முல்லைத்தீவு அலம்பலைச் சேர்ந்த மீக்கலாப்பிள்ளை அந்தோனிப்பிள்ளை சன்சோனி கமிஷன் முன் தொடர்ந்து சாட்சியமளிக்கையில்கூறியதாவது!

ஆகஸ்ட் 21ம்தேதி வீட்டில் இருக்கும்போது அலோசியஸ் மூகமட்டுடன், வேறு இருவரும் வந்தார்கள். அவர்கள் மீன்பிடி கூட்டுத்தாபனத்தில் வேலைசெய்பவர்கள். குணம் என் மைத்துனர் 76ம்ஆண்டு முதல் குணம் ஐஸ்வாடி வைத்திருக்கிறார். அலோசியஸ் அந்த வாடியில் வேலை செய்கிறார். 2 இராணுவத்துடன் வந்த வல்பொல இப்பிரதேசம் சிங்களவருடையது உடனடியாக வெளியேறுங்கள் என்று அலோசியஸிடம் கூறினார் என்ன நடந்தது என்று கேட்டேன் பொலிஸாருக்கு குணம் தன்னை அனுப்பியதாக கூறினார். இரவு 9மணிக்கு வீட்டில் இருக்கும்போது ஜீப் ஒன்று வந்தது ‘என்ன கூட்டமாக நிற்கிறீர்கள்’ என்று இன்ஸ்பெக்டர் டேவிட் கேட்டார் கொக்கிளாயில் மச்சானையும் மற்றவர்களையும் தூரத்திவிட்டார்களென்றும் பாதுகாப்பு தரும்படியும் கேட்டேன் எனக்கு முன்னால் அலோசியசையும், மற்ற இருவரையும் ஏற்றிக்கொண்டு முல்லைத்தீவு போனார். இரவு 12மணிபோல் குணம் வீட்டிற்கு வந்தார். அங்கு குணம் ஒருநாள் நின்றார் அவரை சுடப்போவதாக பொலிஸார் பயமுறுத்தியதால் வேறு இடத்திற்கு அனுப்பினோம்.

ஆகஸ்ட் 26ம் தேதி என் மைத்துனர் வீட்டில் ஒருவரும் இல்லை நான்போய் பக்கத்து வீட்டில் காவலுக்கு இருந்தேன் எம் பியின் தோட்டத்திலுள்ள கொட்டிலும் எரிக்கப்பட்டு என் மைத்துனரின் வீடும் எரிக்கப்பட்டது இரவு 8 மணிக்கு ஜீப் ஒன்று வந்து நின்றது. கொக்கிளாயிலிருந்து ஜீப் வந்தது எம்.பி. தோட்டத்து சேற்றுடன் நின்றது, இராணுவத்தினர் இறங்கி சென்று எரித்தனர், நான் மைத்துனர் வீட்டு வாசலில் நின்றேன். பின் மைத்துனர் வீடு எரிந்தது, ஜீப் முல்லைத்தீவு பக்கம் சென்றது. நான் 27-ம் திகதி எம் பிக்கு சொன்னேன் நான் பயத்தால் மைத்துனரையும், அக்காவையும், பிள்ளைகளையும் யாழ்ப்பாணம் அனுப்பினேன். இன்ஸ்பெக்டர் டேவிட், குணத்தை கொண்டுவந்து எங்கள் கையில் தரவேண்டும் இல்லாவிட்டால், உங்களை சுடுவோம் என்றார், அதனால் குணம் தலைமறைவாக இருந்தார், பொலிசார் இராணுவம், அவரை கண்டிருந்தால் சுட்டிருப்பார்கள், முல்லைத்தீவு கோட்டில் அவர் மீது வழக்கு இருந்தது.

### உருளைக்கிழங்கு—

[ம் பக்கத் தொடர்ச்சி]

தின் தோட்டத்தில் உருளைக்கிழங்கு திருடமுயற்சித்ததாகக் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

இதற்குமுன் 5 திருட்டுவழக்குகளில் குற்றவாளியாகாணப்பட்டதாக எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டதைத் தொடர்ந்து ஒருவருட கடூழிய சிறைத்தண்டனையாக தீர்ப்பு வழங்கப்பட்டது.

### மாணவர்—

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யாகவே போய்விட்டது.’’ என்று கவலை தெரிவித்தார்.

பிரதம மந்திரி திரு. ஆர். பிரேமதாஸா பதிலளிக்கையில், மாணவர்களுக்கு அரசாங்கம் தகுந்த பாதுகாப்பு அளிக்கப் பின்நிற்காதென்று உறுதியளித்தார். [ம]

### கடுமையாகத் தாக்கப்பட்டார்

மாங்குளம் எப். பி. எல். கந்தோரைச் சேர்ந்த தொழிலாளி சு. விபுலானந்தன் சாட்சியத்தில் கூறியதாவது: மாங்குளப் பக்கமாக சில வாகனங்கள் நின்று கொண்டிருந்தன. இரைச்சல் சத்தம் கேட்டது, கடைசியாக வந்த ஜீப், கந்தோர் வாசலில் நின்றது, என்னுடன் பரராஜசிங்கம் நின்றார், சற்குணராசா கந்தோரிலிருந்து வெளியில் சென்று கொண்டிருந்தார், கைகளை உயர்த்தியபடி ஜீப்புக்கு கிட்ட வந்தார், அவர் கடுமையாக தாக்கப்பட்டார், பின் ஜீப் சென்று விட்டது. நாங்கள் ஓடிப் போனோம், சற்குணராசா மயக்கமடைந்திருந்தார். சற்குணராசாவை யாழ்தேவியில் ஏற்றி கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் சேர்த்தோம். அங்கும் அவர் மயக்கம் தெளியவில்லை.

சட். சரத் சில்வா! ஆமி ஜீப் நம்பர் தெரியுமா?-தெரியாது.

### திருமண அழைப்பு

#### ரகு!— பத்மலோஜினி

(மக்கள் வங்கி, சங்கானை)

9-4-78 (பங்குனி 27) ஞாயிற்றுக்கிழமை மாலை 6-45—8-03 மணி சுபவேளையில் மானிப்பாய் வேலக்கைப் பிள்ளையார் கோவிலில் நடைபெறும் ரகு - பத்மலோஜினி திருமண வைபவத்தில் கலந்து கொண்டு மணமக்களை ஆசீர்வதிக்குமாறு உறவினர்களையும் நண்பர்களையும் அன்புடன் அழைக்கின்றோம். . கா : துரைசிங்கமும் பாரியாரும் (மணமகனின் பெற்றோர்) வடக்கம்பரை, சுழிபுரம். திருமதி மணி வசுப்பிரமணியம் (மணமகளின் தாயார்) கல்லூரி வீதி, மானிப்பாய். 8979

# அ. இ. தர்ம இல்லங்கள் ஒன்றியம் உதயமாகிறது

[யாழ்ப்பாணம்]

அகில இலங்கை தர்மநிலையங்களின் ஒன்றியம் ஒன்று அமைக்கப்படவிருக்கிறது. இவ்வொன்றிய அங்குரார்ப்பணக் கூட்டம் இம்மாதம் 9ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை கைதடியிலுள்ள இலங்கைச் சைவ அநாதை இல்லத்தில் நடைபெறும்.

தற்காலிக சபை நிறுவுதல், ஒன்றியத்தின் பொதுக்கடமைகள் தியாகிகள் பயிற்சி திட்டவட்டமான செயற்பாடு முதலானவைபற்றி அன்றைய கூட்டத்தில் ஆராயப்படும் மற்றும் தற்காலிக செயற்குழு அன்று அமைக்கப்படும்.

இவ்வங்குரார்ப்பணக் கூட்டத்தில் கலந்துகொண்டு தமது கருத்துக்களை வழங்குமாறு கரவெட்டி ஆச்சிரமப் பொறுப்பாளர் சுவாமி பரமானந்தா, கிளிநொச்சி குருகுலப் பொறுப்பாளர் திரு. வே. கதிரவேலு, கைதடி இலங்கைச் சைவ அநாதை இல்லப்பொறுப்பாளர் திரு அ. கந்தையா ஆகிய மூவரும் வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளனர். (அ)

# லாகூர் நீதிமன்றம் மீது தாக்குதல் நடத்த முயற்சி

## அமைச்சர் மகன் கைது

[லாகூர்]

லாகூர் உயர் நீதிமன்றத்தின் மீது நடத்தத் திட்டமிடப்பட்டிருந்த தாக்குதல் முயற்சியொன்று, தக்கசமயத்தில் முறியடிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் ஜுல்பிகார் அலி பூட்டோவுக்கு மரணதண்டனை விதித்த லாகூர் உயர் நீதிமன்றத்தின் மீதே தாக்குதல் நடாத்தத் திட்டமிடப்பட்டிருந்தது.

முன்னாள் பாகிஸ்தான் பிரதமர் ஜுல்பிகார் அலி பூட்டோவுக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டதையடுத்துநாட்டில் வன்செயல்கள் இடம்பெற்று வந்தன.

இதைத் தொடர்ந்து லாகூர் உயர் நீதிமன்றத்தின் மீதும், ஏனைய அரச கட்டிடங்கள் மீதும் திடீர்தாக்குதலை நடாத்தத் திட்டமிடப்பட்டதாகத் தெரிய வந்துள்ளது.

பாகிஸ்தான் அமைச்சர் ஒருவரின் மகன் பல கைக்குண்டுகளுடன் கைதுசெய்யப்பட்டுள்ளமை இச்செய்தியை ஊர்ஜிதம் செய்துள்ளதாம்.

இச்சதிமுயற்சி தொடர்பாக முன்னாள் அமைச்சர்களும், அரசியற் பிரமுகர்களும் பாகிஸ்தான் பொலிசாரால் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

### 3-வது டெஸ்ட் ஆஸி. வெற்றி

ஜோர்ஜ்டவுண், ஏப் 6

மேற்கிந்திய - ஆஸ்திரேலிய 3-வது கிரிக்கெட் டெஸ்டில் ஆஸ்திரேலியா 3 விக்கட்டுகளால் வெற்றி பெற்றுள்ளது. 3வது டெஸ்டில்முதலில் ஆடிய மேற்கிந்தியா முதல் இன்னிங்ஸில் 205 ஓட்டங்களையும் இரண்டாவது இன்னிங்ஸில் 439 ஓட்டங்களையும் பெற்றது.

ஆஸ்திரேலியா முதல் இன்னிங்ஸில் 286 ஓட்டங்களையும் இரண்டாவது இன்னிங்ஸில் 7 விக்கட்டுகளை இழந்து 362 ஓட்டங்களையும் பெற்றது. [இ]

# யாழ். ரோட்டரி நடத்தும் பஸ் நடத்துநர் தெரிவு

## கூப்பன்

நடத்துநரின் பெயர்.........................................

பதிவு இலக்கம்.........................................

அனுப்புபவரின் பெயர்.........................................

அனுப்புபவரின் விலாசம்.........................................

திகதி .........................................

ஒப்பம்

இக்கூப்பனைக் கத்தரித்து பூர்த்தி செய்து டாக்டர் பா. சோ. பாரதி, 24, ஆஸ்பத்திரி வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பவேண்டும். கூப்பன் இன்றி அனுப்பப்படும் தெரிவுகள் நிராகரிக்கப்படும். (இ)

# மரண அறிவித்தல்

## வாஷிங்டன் சுகிர்தரத்தினம் சொலமன்

காலஞ்சென்ற ஸி. ரி. சொலமன் மாஸ்டர் (பத்திரிகை நிருபர்) மகனும் காலஞ்சென்ற ரேச்சல் ராஜரத்தினம் சொலமனின் அன்புக் கணவனும் திருமதி செபஸ்தியாம்பிள்ளை ஜெயராணி, இரத்தினராஜா சொலமன் (சாம்) (மின்சாரப் பொறியியலாளர், இங்கிலாந்து) ஆகியோரின் தந்தையும் பிறின்ஸ் சாவித்திரி தேவி, இராசையா சரஸ்வதிதேவி, பாலரத்தினம் சொலமன் (யாழ். மாநகரசபை) இராசரத்தினம் சொலமன் (மரக்கூட்டுத்தாபனம், வவுனியா) வோல்ட்டர் அரியமலர் (அமெரிக்கா) திருமதி பிள்ளை ஜெயமலர் ஆகியோரின் சகோதரனுமான வாஷிங்டன் சுகிர்தரத்தினம் சொலமன் (மாநகரசபை மின்சாரப்பகுதி இளைப்பாறிய அதிகாரி) காலமானார்.

அன்னாரது பூதவுடல் கோப்பாய் சிலுவானஒழுங்கை ‘ராஜஸ்தான்’ இல்லத்திலிருந்து கோப்பாய் செல்மேரிஸ் சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக சனிக்கிழமை காலைஎட்டு மணிக்கு எடுத்துச்செல்லப்படும். 8980

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் கிறாமைஸ் நகரம் யாழ்ப்பாணம் வெள்ளோசிக் கேம்ஸ் வீதி 68-ல் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1978-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 7-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu Post Box No. 49, Jaffna. Telegram Eelanaadu. Telephone 389. Registered as a Newspaper in Srilanka